# ரெட்டி மலர்

உறவை வளர்ப்போம் உணர்வை காப்போம்

தமிழ் மாத இதழ்

REDDY MALAR, Tamil Monthly

மலர் : XVIII | இதழ் : 4 | ஜூலை 2024 | விலை. ரூ.15/–

Vol. : XVIII | Issue No : 4 | JULY 2024 | Price. Rs.15/


## சமூகப் போராளி டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி



சிறப்பு கட்டுரை

பிறப்பு : 30.07.1886

இறப்பு : 22.07.1968

என்றென்றும் உங்களுடன்

HJ ஹரிணி ஜுவல்லர்ஸ்



தங்கநகை சேமிப்புத் திட்டத்தில்
செய்கூலி, சேதாரம் இல்லை

64-A, 65, சிந்தாமணி பஜார், (அண்ணா சிலை அருகில்) திருச்சி - 2
Cell: 0431-2704916, 81488 24916 e-mail: harinijewell2014@gmail.com

# ரெட்டி மலர்

நிறுவனர் :
"கல்வி காவலர்" கே.ரெங்கராஜன் (KRT)

மலர் : XVIII ஜூலை 2024 இதழ் : 4


| | | |
|---|---|---|
| வெளியீட்டாளர் | : | V. செல்வராஜு |
| ஆசிரியர் | : | R. இராஜசேகரன் |
| கௌரவ ஆசிரியர் | : | R. புகழேந்திரன் |
| இணை ஆசிரியர்கள் | : | R. அன்பழகன் |
| | | P. ஜனார்த்தனம் |
| துணை ஆசிரியர்கள் | : | D. மணிவாசகன் |
| | | V. ஜெயக்குமார் |
| சட்ட ஆலோசகர் | : | R. பாபு B.A.,B.L., |

**விற்பனைப் பிரிவு மேலாளர்**

R. காமராஜ்

**விற்பனைப் பிரிவு நிர்வாகிகள்**

R. நந்தகுமார்
N. சுந்தரராஜு
M. ஜெயபிரகாஷ்

**விளம்பரப் பிரிவு மேலாளர்கள்**

J. ஐயப்பன்
P. மோகன்

**விளம்பரப் பிரிவு நிர்வாகிகள்**

S. காமராஜ்
R. பார்த்திபன்
S. பூவேந்தரசு

**ஆலோசனைக் குழு**

L. தமிழரசன், சென்னை
திருமதி.தேவிமோகன்
S. மோகன், கோவை
N. பெரியசாமி, திருச்சி
R.V. செல்வகுமார், விளாத்திகுளம்
R. சண்முகைய்யா, RSR சிவகாசி
P. தாமோதரன், தாம்பரம்
M. கிருஷ்ணசாமி, சென்னை
T. ரவிச்சந்திரன், விழுப்புரம்
R.D. ராஜமுருகன், விருதுநகர்
S. சதீஷ்குமார், மதுரை (மோனிகா)
S. ராமராஜன், திண்டுக்கல்
K. சூரியகுமார், தஞ்சாவூர் மாவட்டம்


## இதழின் உள்ளே........


- ஆசிரியர் தலையங்கம் - 4
- நிறுவனத்தலைவர் மடல் - 5
- உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கைத் தொடர் - 6-9
- ஓ.பி.ஆர்.நினைவுத் தொண்டு அறக்கட்டளை ஆலோசனைக் கூட்டம் - 10
- சமூக போராளி டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி சிறப்பு கட்டுரை - 11-16
- சங்க செய்திகள் - 17-24
- விவாதத்தில் வெல்ல உதவும் திறன்கள் - 25-26
- ஆன்மீகப் பகுதி - 27-29
- விளம்பரம் - 30
- திருமணத் தகவல்கள் - 31-33
- தபால்பெட்டி - 34


## அன்பான வாசகர்களே!

தபால் பெட்டி பகுதிக்கு உங்களின் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நிறையோ, குறையோ உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் அஞ்சலட்டையில் உங்களின் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். தன்னம்பிக்கை வரலாறு, சாதனையாளர்களின் வெற்றி செய்தி, கதைகள், கட்டுரைகள் மற்றும் ரெட்டியார் சமூக சங்க செய்திகளை எழுதி அனுப்பலாம். எங்களுக்கு வரும் மடல் மூலம் உங்களின் தேவை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறப்பான கட்டுரைகளை உங்களுக்குத் தரமுடியும். கடிதங்களை **ரெட்டி மலர்** அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.


## அலுவலக முகவரி

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
: 044 - 2485 3333, 96888 77700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Matrimony Online Website :
www.reddymatrimony.co.in
Subscribe : YouTube : oprchannel
http://youtube.com/@oprchannel1157

# ஓர் அணியாய் திரள்வோம்

## தலையங்கம்

என் சமூகம், என் மக்கள், ரெட்டியார்களின் நலனே என் உயிர்மூச்சு என்று கூறிவரும் நம் தலைவர்களின் நம்பிக்கை வார்த்தைகள் நம் இளைஞர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புகளை உருவாக்கியுள்ளது. ஆனால் சங்க அமைப்புகளால் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் தொடர் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் அது விரைவான பலனை அளிக்கவில்லை. பொறுப்பாளர்களின் மெத்தனம், ஒருங்கிணைப்பு இன்மை, ஈகோ மற்றும் நம் இளைஞர்களின் ஆக்கப்பூர்வமான ஆதரவின்மை ஆகியவை வெவ்வேறு அளவுகளில் காரணமாக இருக்கின்றன. இதன் காரணமாக அதிருப்தி பரவலாக காணப்படுகிறது.

ஒற்றுமையின்மை மற்றும் குறை கூறும் செயல்களால் நமது ரெட்டியார் சமுதாயம் பின்தங்கிய நிலையில் உள்ளது. இது நமது சமுதாயம் அடுத்துவரும் காலப்பகுதியில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதுக்குறித்த தெளிவான திட்டமிடல் இல்லாததையே வெளிப்படுத்துகிறது. இதனை களைய நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கும்பட்சத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

சிலர் பெரியண்ணன் போல் செயல்படுவதாலும், சிலர் தன்னிச்சையாக செயல்படுவதும், ஒருவருக்கொருவர் குறைக்கூறிக்கொள்வதும், வேறு பல அரசியல் காரணங்களாலும் நம் சமுதாயத்தின் முக்கியமான பிரச்சனைகளுக்கு இன்றுவரை தீர்வு காணப்படவில்லை. இன்று படித்த இளைஞர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு கல்விக்கேற்ப வேலை இல்லை. அவர்கள் இடஒதுக்கீடு மறுப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் சொந்தக்காலில் நிற்பதற்கு முயற்சிக்கும் இளைஞர்களுக்கு சுயத்தொழில் வாய்ப்புகளும் இல்லை. நம் ரெட்டியார் சமூக மக்களுக்கு விவசாயத் தொழிலைத் தவிர வேறு எதுவும் தெரியாது என சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலை மாறவேண்டும்.

நம் சமூகத்திற்கு வரும் தாக்குதல் மற்றும் தடங்கல்களை இன்று இளைஞர்கள் உணர தொடங்கிவிட்டனர். பிற்படுத்தப்பட்டத்துறை அமைச்சர் ரெட்டியார்கள் எல்லாம் வசதியானவர்கள் என சட்டப்பேரவையில் கருத்துத் தெரிவிக்கிறார். இந்த உள்நோக்கம் கொண்ட, உண்மைக்கு புறம்பான பேச்சு நம் உச்சந்தலையில் அடிப்பது போல் இருந்தது. இது கண்டிக்கத்தக்கது. அது நம் அனைவரின் மனதை புண்படுத்தியிருந்தாலும், மக்களிடம் ஒற்றுமையை கொண்டு வர ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

வருவாய் துறை அதிகாரிகள் நமக்கு கஞ்சம் ரெட்டி சான்றிதழ், EWS சான்றிதழ் மற்றும் தெலுங்கு மொழி சான்றிதழ் என எதையும் தராமல் விரட்டியடிக்கின்றனர். பாதிக்கப்பட்ட நாம் ஓர் அணியில் திரளவேண்டிய நேரமிது. இன்று நம்முன் இந்த பிரச்சனைகளுக்கு தீர்வுக்காணுவதற்கான களம் உருவாகியிருக்கிறது. இளைஞர்கள் தெருவில் இறங்கி போராட இதைவிட நல்ல தருணம் இனி கிடைக்காது.

மேற்படி நம் ரெட்டி கஞ்சம் பிரச்சனை தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் ராஜகண்ணப்பன் விளக்கம் தந்துள்ள நிலையில் இதற்கு உறுதியான நிரந்தர தீர்வு வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாக உள்ளது. ரெட்டியார் சமூக மக்கள் ஓர் அமைப்பாய் திரளாவிட்டால் எதிர்காலத்தில் நம் நிலைமை கேள்விக்குறியாகிவிடும்.

ஒரு கை எழுப்பும் ஓசையை விட ஒரு கூட்டம் எழுப்பும் ஓசை சக்திவாய்ந்தது. அதுபோல் தான் தனியாய் குரல் கொடுப்பதை விட ஒரு அணியாய் குரல் கொடுத்தால் எதையும் சாதிக்கலாம். இதற்கு கடந்த மாதம் சட்டப்பேரவையில் நடைபெற்ற நிகழ்வே சாட்சியாகும்.

ஆண்டுதோறும் நம் சமூக அமைப்புகள் சார்பில் குடும்பவிழா, யுகாதி விழா, மாணவர்களுக்கு ஊக்கப்பரிசு வழங்கும் விழா என நம் கலாச் சாரத்தையும், பண்பாட்டையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் வகையில் பலரும் சிறப்பாக செயல்பட்டு வருகிறோம். ஆனால் இடஒதுக்கீட்டு பிரச்சனையால் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நம் இளைஞர்கள் கல்வி, வேலைவாய்ப்பை இழந்து நிம்மதியற்ற சூழலில் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலை மாறிட அனைத்து மாவட்டங்களிலும் நம் அமைப்புகளின் மூலம் தீர்மானம் இயற்றப்பட்டு அந்தத் தீர்மானங்களை அரசுக்கு அனுப்பியும் நாம் எடுத்த முயற்சிகள் அனைத்தும் இன்று வரை பலனளிக்கவில்லை.

வேலை தேடும் நம் சமுதாய இளைஞர்களின் முழக்கம் கோட்டையில் உள்ளவர்களின் செவிகளில் கேட்கும்படி செய்யவேண்டும். நாளைய ரெட்டி சமூகத்தை நமக்கான சமுதாயமாய் உருவாக்க வேண்டும். இதனை வெற்றிகரமாய் செய்துமுடிக்க ரெட்டியார்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். நம் ஒன்றுபட்ட அமைப்பு 2016ல் திண்டிவனத்தில் பிரமிக்கத்தக்க மாநாட்டை நடத்தி நம் சமூகத்தின் மீது அரசியல் தலைவர்களின் பார்வையை திருப்ப முடிந்தது. மனசாட்சி உள்ள எவரும் இதனை குறை சொல்லமுடியாது. இதனை அறிந்தவர்கள் இன்று சிறுசிறு குழுக்களாக பிரிந்து செல்லமாட்டார்கள்.

நமது சமுதாயம் பல்வேறு பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு உயரவேண்டும். சமூக, பொருளாதார, அரசியலில் முழுமையான வளர்ச்சியினையும் முன்னேற்றத்தையும் பெற அனைவரும் ஓர் அமைப்பின் கீழ் திரளும்போதுதான் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். அதை விட்டுவிட்டு பிரிவினையை பேசிக்கொண்டே இருந்தால் அடுத்த தலைமுறை நம்மை நிந்திக்கும், நாம் தவறு இழைத்தவர்களாவோம்.எனவே இனியும் இந்நிலை நீடிக்கவேண்டாம். சமுதாய அமைப்பில் அங்கம் வகிப்பவர்களே விழித்துக்கொள்ளுங்கள்.

ரெட்டியார் சமுதாய மக்களின் மீது அக்கறைக் கொண்ட அனைவரும் ஓர் அணியில் திரண்டு போராடி வெற்றிப் பெற்றிடவேண்டும். அப்போது தான் நம் பிள்ளைகளின் எதிர்காலத்தை அவர்களே நிர்மாணித்துக் கொள்ளமுடியும். ரெட்டியார் சமூகமும் அதன் தனித்துவமும் காக்கப்படும். ரெட்டியார் சமுதாயமே இனியாவது ஒன்றுபடுங்கள்.

R. இராஜசேகரன் ஆசிரியர் குழு

# ரெட்டி இளைஞர் பேரவை

அலுவலக முகவரி : எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
044 - 2485 3333, 96888 77700. E-mail Id : reddymalar06@gmail.com
Website : www.reddymalar.com, Twitter : @malar_reddy.twitter.com, website : www.reddymatrimony.co.in


## நிறுவனத்தலைவர் மடல்.....



**V.செல்வராஜு**
**நிறுவனத்தலைவர்**

**அ**ன்பு உறவுகள் அனைவருக்கும் பணிவான வணக்கங்கள்.

**25.08.2024** அன்று முதல் முதல்வர் ஓமந்தூர்.பி.ராமசாமி ரெட்டியார் அவர்களின் நினைவு நாள் வர இருக்கிறது. அன்னாரது உயரிய கொள்கைகளையும், தூய்மையான ஆட்சியையும் அந்நாளில் நாம் அனைவரும் நினைவுகூற வேண்டும். இவரது ஆட்சியில் தான் இந்து சமய அறநிலையத் துறை சட்டம் முறைப்படுத்தப்பட்டது. அரசு ஊழியர்கள் மீது புகார் வந்தால் நடவடிக்கை எடுக்க ஒழுங்கு நடவடிக்கைப் பிரிவை ஏற்படுத்தியவரும் அவர்தான். அவரை ‘ஓமந்தூர் ராமசாமி அல்ல. காந்தி ராமசாமி’ என்றார் பேரறிஞர் அண்ணா. சென்னையில் அண்ணாசாலையில் உள்ள அரசினர் தோட்டத்திற்கு ‘ஓமந்தூரார் வளாகம்’ என பெயர் சூட்டியவர் தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர்.கலைஞர்.மு.கருணாநிதி அவர்கள். ‘எல்லாவற்றிலும் முதல்வர்’ என்று உதாரணம் காட்டத்தக்க மனிதராக ஓ.பி.ஆர். வாழ்ந்து மறைந்தவர்.

**ஓ**மந்தூராரின் வாழ்க்கை அரசியல் பாடமாகவும், இலக்கணமாகவும் அமைந்துள்ளது. இத்தகைய அப்பழுக்கற்ற உத்தமர் ஓமந்தூரார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை பள்ளிக் கல்விப் பாடத்திட்டத்தில் வைக்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளது. அறிவொளிமிக்க இளைய சமுதாயத்தை உருவாக்க, இன்றைய மாணவர்கள் தான் எதிர்காலத் தலைவர்கள், தமிழகத்தின் வளர்ச்சியே மாணவர்களின் கையில்தான் உள்ளது என்பதை அறிந்து காலை உணவுத் திட்டத்தை விரிவுப்படுத்தி வரும் முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தக் கோரிக்கையினை கனிவோடு ஏற்று நிறைவேற்றித் தரவேண்டும் என ஒட்டுமொத்த ரெட்டியார்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

**ந**மது ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நடத்தி வரும் கே.ஆர்.டி. கேரியர் அகாடமியின் மூலம் TNPSC குரூப் 1 முதன்மைத் தேர்வு எழுதிய 6 மாணவர்களில் ஒரு மாணவி, ஒரு மாணவர் என 2 பேர் நேர்முகத் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு கலந்து கொண்டனர். இதில் திரு. T.ராஜராஜன் என்ற மாணவர் துணை காவல் கண்காணிப்பாளராக (DSP) பணி ஆணை பெற்றுள்ளார்.

**மே**லும், TNPSC Group II முதன்மைத் தேர்வு எழுதியவர்களில் 13 மாணவ, மாணவிகள் தற்போது பணி ஆணை பெற்றுள்ளனர். இதில் ஒரு மாணவர் திரு.R.புவியரசு. இவர் ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த கிராமப்புற எளிய மாணவர். இவருடன் பணி ஆணை பெற்ற அனைவரும் மேலும் பல பதவி உயர்வுகளை பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறேன். இதுப்போன்று தங்கள் பகுதியில் நம் சமூகத்தைச் சேர்ந்த திறமையும், தகுதியும் கொண்ட மாணவர்களை எங்களிடம் அனுப்பி வைத்தால் அவர்களுக்கு எல்லாவித சலுகைகளுடனும் சிறப்பாக வழிக்காட்டிடவும், உதவிடவும் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை தயாராக இருக்கிறது.

**மா**நில அளவில் TNPSC நடத்திய Group IIA பதவிகளுக்கான போட்டித் தேர்வுகள் நடைபெற்றது. இதில் வேறு வேறு அகாடமியில் பயின்ற ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் அதிகாரமிக்க அரசு பணிகளில் அமர உள்ளனர். இவர்கள் குறித்த விவரம் - மதுரை மாவட்டம் திருமங்கலத்தைச் சேர்ந்த திரு.K.கார்த்திக், திருவள்ளூரைச் சேர்ந்த திருமதி.R.ஞானாம்பிகை, குளித்தலையைச் சேர்ந்த திருமதி.P.சரண்யா, சென்னை, சிட்லபாக்கத்தைச் சேர்ந்த திரு.R.புவியரசு. இவர்கள் பணியில் சிறக்க அனைவரின் சார்பிலும் வாழ்த்துகள்.

**T**NPSC, TNUSRB, SSC, UPSC & RRB போன்ற போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்ட நமது சமூகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் எதிர்காலத்தில் நல்லது நடக்கும் என்னும் நம்பிக்கையை அவர்கள் எப்போதும் வளர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக முதல்முறை தேர்வு எழுதும்போது உங்களுடைய மதிப்பெண்கள் 85% கடந்தால் நிச்சயம் உங்களுக்கு வாய்ப்புகள் இருக்கிறது என்று அர்த்தம். இரண்டாவது முறை மற்றும் மூன்றாவது முறை உங்களுடைய மதிப்பெண்கள் 90% கடந்தால் நிச்சயம் உங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது உறுதி என்று நீங்கள் உறுதியாக இருக்கலாம். ஆனால் முதல் மூன்று முறையும் 80% மதிப்பெண்களை தொடவில்லை என்றால் வேறுவேலைக்கு சென்றுவிடலாம். போட்டித் தேர்வுகளில் வெற்றிப்பெறுவதற்கு பல்வேறு வழிகாட்டுதல்கள் கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் வழங்கப்படுகிறது. அதனை நீங்கள் முறையாக பின்பற்றினால் நிச்சயம் தேர்வில் வெற்றிப் பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது. விருப்பமும், திறமையுள்ளவர்கள் இணைந்து கொள்ள அழைக்கிறோம். வாரீர்.

**அ**டுத்த இதழில் சந்திப்போம். நன்றி.

என்றென்றும் சமுதாய உணர்வுடன்,

**Dr.V. செல்வராஜ்**



### சென்னைப் பயணம்

1970ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஓமந்தூரார் சென்னைக்குச் சென்று சாந்தோமிலுள்ள தன் தம்பி ஓ.எம்.லட்சுமி நாராயணரெட்டியார் இல்லத்தில் தங்கி டாக்டர்.இரத்தினவேலுசுப்பிரமணியத்திடம் வைத்தியம் செய்துகொண்டார். அப்போது திரு.நா.மகாலிங்கம், இராமலிங்கர் பணி மன்றத்தின் செயலாளர் டாக்டர்.ஔவை நடராசனை அடிக்கடி அங்கு அனுப்பி ஓமந்தூராருக்குத் துணையாக இருக்கச் செய்தார். கண் பார்வை குறைந்த நிலையிலும் ஆறுபடை வீடுகளுக்கு யாத்திரை செல்ல வேண்டுமென்று ஓமந்தூரார் விரும்பினார். அவர் அவ்வாறு செல்வதற்கு திரு.ந.மகாலிங்கம் எல்லா வசதிகளையும் செம்மையாகச் செய்து தந்தார்.

முதலமைச்சராய் இருந்த டாக்டர்.கலைஞர் மு.கருணாநிதி, ஓமந்தூராருக்கு அரசு செலவிலேயே அனைத்து வைத்தியமும் செய்ய விரும்புவதாகவும், அவர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டுமென்றும் சொல்லி யனுப்பினார். ஓமந்தூரார் அவ்வேண்டுகோளுக்கு இணங்கவில்லை.

“என் செயலால் ஆவது யாதொன்றுமில்லை, இனித் தெய்வமே! உன் செயலே என்று உணரப் பெற்றேன்’

என்ற பட்டினத்தார் அருள்வாக்கு எவ்வளவு உண்மையான அனுபவ வாக்கு என்பதை ஓமந்தூரார் உணர்ந்தார்.

### மறைவு

25.08.1970, சாதாரண தமிழ் ஆண்டு ஆவணித் திங்கள் 9-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு அன்பர்கள், நண்பர்கள், அரசியல் தலைவர்கள் பலர் சூழ்ந்திருக்க ஓமந்தூராரின் உயிர் பிரிந்தது.

ஓமந்தூராரே 1947இல் தம் நண்பர் வெங்கட்ராம ரெட்டியார் என்பவர் இறந்தபொழுது எழுதிய பின்வரும் சொற்கள் ஓமந்தூராருக்கும் பொருந்தும்.

“அவர் எவ்வளவு நேர்மையானவர், நெறியுள்ளவர், அவர் வாழ்நாள் முழுவதும் தேசத்துக்காகவும், ஜன சமூகம் ஒழுங்காக இருக்க வேண்டும் என்பதற்காகவும், சங்கங்களையும் சமாஜங்களையும் ஏற்படுத்தி தெய்வத்தொண்டும் தேசத்தொண்டும் அல்லும்பகலும் செய்து வந்தார். அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியே அவர் பூத உடலை விடும்படியாக வந்தது”.

### இறுதி மரியாதை

ஓமந்தூரார் இறந்தவுடனேயே வானொலியில் செய்தி அறிவிக்கப்பட்டது. தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. சட்டசபையும் மேல் சபையும் ஒத்தி வைக்கப் பட்டன. இருசபைகளிலும் அமைச்சர்கள் இரங்கல் உரையாற்றினார்கள். இரவு 8 மணி வரை உடல் சென்னையில் அவர் வீட்டிலேயே மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங், முதலமைச்சர் திரு.கருணாநிதி, அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோரும் திரு.காமராஜ், திரு.சி.சுப்பிரமணியம், திரு.கக்கன், திரு.கருத்திருமன், திரு.கே.சந்தானம் ஆகிய அரசியல் தலைவர்களும் வந்திருந்து மாலை இட்டு இறுதி மரியாதை செய்தனர். கவர்னரும், தமிழக அரசின் முதலமைச்சரும், மலர் வளையங்கள் வைத்தனர். ஏராளமான அலுவலர்களும் பொதுமக்களும் வந்து குழுமி இறுதி மரியாதை செலுத்தினர்.

### வடலூரில் ஏற்பாடுகள்

ஓமந்தூரார் இறந்த அன்று மிக முக்கியமான அலுவலகபணியாக திரு.நா.மகாலிங்கம் தில்லிக்குப்புறப்பட்டுக்கொண்டிருந்தார். தம் இல்லத்திலிருந்து காரில் ஏறி மீனம்பாக்கம் விமான நிலையத்துக்குச் செல்லத் தயாராக இருந்தார். அப்போது ஓமந்தூரார் மறைந்த செய்தியைத் திரு.பகீரதன் தெரிவித்தார்.

உடனே திரு.நா.மகாலிங்கம் தம்முடைய தில்லிப் பயணத்தையும் அடுத்த பல நாட்களுக்கு ஒப்புக் கொண்டிருந்த பல நிகழ்ச்சிகளையும் கைவிட்டார்.

வடலூருக்குத் தகவல் கொடுத்து, உடல் அங்கே கொண்டு வரப்படுமென்றும், சமாதி வைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச்செய்யும்படியும் சொன்னார்.

பிரிவுச்செய்தி வடலூருக்கு எட்டியவுடன் வள்ளலார் குருகுலம் பள்ளி விடுமுறை அளிக்கப்பட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும் மௌன ஊர்வலம் நடத்தினர்.

பத்திரிக்கை நிறுவனங்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும், ஓமந்தூராருடன் தொடர்பு கொண்ட தமிழ்நாட்டுப்பெருமக்கள் அனைவருக்கும் திரு.நா.மகாலிங்கம் தொலைபேசி வழியாக ஓமந்தூராரின் பிரிவுச்செய்தியையும், மறுநாள் வடலூரில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சியைப் பற்றியும் அறிவித்தார்.

திரு.நா.மகாலிங்கம், திருவலம் சுவாமிகளுக்கு தொலைபேசி மூலம் செய்தி அனுப்பி சுவாமிகள் உடனே வடலூருக்கு சென்று சமாதி வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் வழிகாட்டி உதவுமாறு வேண்டிக் கொண்டார்.

திருவலம் சுவாமிகள் பொள்ளாச்சி ஆனைமலை சக்தி எஸ்டேட்டில் 26 நாளும் சித்தூர் கரும்பாடி சின்னம்மரெட்டியார் சிங்கார நந்தவனத்தில் 96 நாளும் தங்கியிருந்த போது திருவலம் கிராமவாசிகள் முறையிட்டதால் மீண்டும் திருவலத்துக்கு வந்த சேர்ந்த சமயம் அது.

ஓமந்தூரார் மறைந்த செய்தி, திருவலம் சுவாமிகளுக்குக்கிடைத்ததும், சின்னம்ம

ரெட்டியார் கார் வந்தால் புறப்பட்டு போக வசதியாக இருக்குமென்று சுவாமிகள் நினைத்தார்கள். நினைத்ததும் திரும்பிப்பார்த்தால், சின்னம்ம ரெட்டியார் அங்குவந்து சேர்ந்துவிட்டார். அவருடைய காரிலேயே வேலூர் சுகானந்த முதலியாரின் மாளிகைக்கு திருவலம் சுவாமிகள் போய்சேர்ந்தார்கள். வேலூரிலிருந்து திரு.சுகானந்த முதலியார் காரில் ஏட்டு கிருஷ்ணமூர்த்தி துணையுடன் திருவலம் சுவாமிகள் புறப்பட்டார்கள்.

மாலை 6 மணிக்குத் திருவலம் சுவாமிகள் வடலூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ஓ.பி.ஆர். வசித்த கட்டடத்தின் முன்னர் சமாதி வைப்பதற்கு நடந்து கொண்டிருந்த ஏற்பாட்டைத் திருவலம் சுவாமிகள் தடுத்து, அதற்குப்பதில் குருகுலம் உயர்நிலைப்பள்ளியின் முன் பகுதியில் கடைக்கால் போட ஏற்பாடு செய்தார்கள்.

### உடல் வடலூருக்கு வருகை

இரவு 8 மணிக்கு ஓ.பி.ஆரின் உடல் மோட்டார் வண்டி மூலம் சென்னையிலிருந்து வடலூருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நள்ளிரவுக்குச் சற்று பின்னர், உடலைத் தாங்கிக் கொண்டு வந்த வண்டி வடலூரை அடைந்தது. ஓ.பி.ஆரின் உடல் அவர் நிறுவிய சுத்த சன்மார்க்க நிலையத்தில் அவர் கட்டிய தியான மண்டபத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

### திருவருட்பா பாராயணம்

இரவு முழுவதும் மறுநாள் பகல் 12 மணி வரையிலும் திருவருட்பா பாராயணம் நடைபெற்றது. இரவு 12 மணியிலிருந்தே திரள் திரளாக மக்கள் வந்து குழுமினர்.

வடலூரிலுள்ள சன்மார்க்க ஸ்தாபனங்கள் அனைத்தும் வந்திருந்து திருவருட்பா பாராயணம் செய்தன. சுத்த சன்மார்க்க நிலையம், திருவருட் பிரகாசவள்ளலார் தெய்வநிலையங்களின் நிர்வாகம், வடலூர் பஞ்சாயத்து, வடலூரிலிருக்கும் பல சன்மார்க்க ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் சார்பில் மாலையணிவிக்கப்பட்டன.

“குருகுலம் பள்ளிக்கு அருகே சமாதி வைத்தால் பையன்கள் பயப்படுவார்கள்’ என்று சிலர் திரு.நா.மகாலிங்கம் அவர்களிடம் கூறினர். “இதெல்லாம் என் இஷ்டம் இல்லை. திருவலம் சுவாமிகள் சொல்கிறபடிதான் நான் நடப்பேன்” என்று திரு.நா.மகாலிங்கம் சொல்லிவிட்டார்.

“ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், சாதாரண மனிதர், இவருக்கு சமாதி வைத்தால் 12 வருஷத்துக்கு ஊரில் மழை பெய்யாது” என்று ஒருவர் சுவாமிகளிடம் கூறினார்.

“இங்கு தான் சமாதி வைக்கப்போகிறேன். இன்று முதல் 10 நாட்களுக்குள் மழை பெய்து கொட்டு கொட்டு என்று கொட்டும். நீங்கள் எல்லாம் மிரண்டு ஓடுவீர்கள். நம்புங்கள். இல்லாவிட்டால் 48ம் நாள் நாங்களே இந்தப் பிரேதத்தை எழுப்பி, என் கையாலேயே காக்கை குருவிகளுக்கு இரையாக்கிவிடுவேன்” என்று சுவாமிகள் சபதம் கூறினார்கள்.

இராமசாமி ரெட்டியார், பெரிய ஞானி, அவரைப் போய் சாதாரண மனிதன் என்று சொல்லுகிறாயே” என்று சுவாமிகள் பெருங்கூட்டத்தில் சொல்லி கட்டடம் எழுப்பி வேண்டிய திரவியங்களைச் சமாதியில் கொட்டினார்கள். சுவாமிகள் முன்னிலையில் ஊரன்அடிகள் ஓ.பி.ஆர். உடலை சமாதியில் வைத்தார். சிலர் ஆதரவாக உடன் பிடித்தார்கள்.

அப்போது திருவலம் சுவாமிகளுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. ஓ.பி.ஆர். கால் மடங்குமோ மடங்காதோ என்பது தான். அந்தச் சந்தேகம் சுற்றிலும் திரை போட்டு எல்லோரையும் திரைக்கு அப்பால் இருக்கச் சொல்லி திருவலம் சுவாமிகள், ஊரன் அடிகள், திரு.நா.மகாலிங்கம், திரு.ஓ.எம்.லெட்சுமிநாராயண ரெட்டியார் ஆகியோரை மட்டும் உள்ளே அனுமதித்து, பிரேதத்தைக் கீழே இறக்கினார். கால் மடங்கா விட்டால் காலை ஒடித்து வைக்கவேண்டும் என்ற எண்ணம் திருவலம் சுவாமிகளுக்கு. அதற்காகத் தான் திரை போடச்சொன்னார்.

பள்ளத்தில் இறக்கியதும் கால் தானாக மடங்கிக் கொண்டது. எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அதன் பிறகு திரையை நீக்கி ஸ்நானம், கிரியைகைகள் எதுவும் கூடாது என்று சுவாமிகள் சொல்லி விட்டார்கள்.

விபூதி, வில்வம், கற்பூரம், உப்பு, செங்கல் தூள், ஒரு வண்டி பூமாலை ஆகியவற்றையெல்லாம் சமாதியில் கொட்டினர். மேல்பகுதியை மூடி 48 நாளில் கோயில் கட்டிப் பூர்த்தியாக வேண்டும் என்று திரு.நா.மகாலிங்கத்துக்கும், ஊரன் அடிகளுக்கும் சொல்லிவிட்டு, சுவாமிகள் விடைபெற்றார்கள்.

### இரங்கற் கூட்டம்

உயர்நிலைப்பள்ளி வெளியில் சுத்த சன்மார்க்க நிலையத்தலைவர் திரு.நா.மகாலிங்கம் தலைமையில் இரங்கற்கூட்டம் நடைபெற்றது. திரு.கி.ஆ.பெ.விசுவநாதம், திரு.எஸ்.சென்னியப்ப முதலியார் ஆகிய அறிஞர்களும் பிரமுகர்களும் இரங்கலுரை ஆற்றினர்.

### சமாதிக் கோயில்

திரு.நா.மகாலிங்கம் அவர்கள் திட்டப்படி, சமாதிக்கோயில் கட்டும் வேலை மேற்கொள்ளப் பட்டு, 48ம் நாளில் கட்டி முடிக்கப்பட்டது. விரைவாக இப்பணியைத் திரு.ஊரன் அடிகளும் வேலூர் திரு.ஊ.வ.தட்சிணாமூர்த்தி அவர்களும் நிறைவேற்றினர். சமாதிக்கோயிலில் பின்வரும் கல்வெட்டுப் பொறிக்கப் பெற்றது.

### ஓ.பி.ஆர். சமாதிக் கோயில்

திரு.ஓமந்தூர் பெரிய வளைவு இராமசாமி ரெட்டியார் 01.02.1895ல் பிறந்தார். இளமை முதல் தேசபக்தர். தமிழ்நாடு காங்கிரஸின் தலைவர் (1938) நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் 4 முறை சிறை சென்றார். சுதந்திர இந்தியாவில் சென்னை

மாகாணத்தின் முதலமைச்சர் (1947-49). 1949ல் அரசியலைத் துறந்து ஆன்மீக வாழ்வை நாடி, வடலூர் வந்தார். வள்ளல் பெருமானின் சமரச சன்மார்க்கப்பணிகளையே வாழ்வாகக் கொண்டார்.

18.06.1951ல் சுத்த சன்மார்க்க நிலையத்தை நிறுவி அதனைத் தொடர்ந்து வள்ளலார் குருகுலம், உயர்நிலைப்பள்ளி, அப்பர் அநாதை மாணவர் இல்லம், அப்பர் சான்றோர் இல்லம் ஆகியவற்றை அமைத்து, தாமே நிர்வகித்தார். ஓய்வு பெற விரும்பி இவற்றை 11.06.1969ல் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். பின் இறுதிவரை வடலூரிலேயே வாழ்ந்தார். 25.08.1970ல் புகழுடம்பு எய்தினார். பூதவுடல் சமாதி செய்யப்பெற்ற இக்கோயில் 11.10.1970ல் திறக்கப் பெற்றது. சான்றோர் ஓ.பி.ஆர் புகழ் வாழ்க என வாழ்த்தினர்.

## சமாதி திருக்கோயில் திறப்பு விழா

ஓ.பி.ஆர் இறைவனடி சேர்ந்த 48ம் நாளாகிய 11.10.1970ல் சமாதியின்மேல் கட்டப்பட்ட கோயிலின் திறப்பு விழா நடைபெற்று அக்கோயிலுக்குள் அமைந்த 'அருட்பெருஞ் ஜோதி வழிபாடும் நிகழ்ந்தது.

தியான மண்டபத்தில் ஓ.பி.ஆர் படம் திறக்கப் பெற்றது. 'சமாதி திருக்கோயில் திறப்பு விழா மலர்' என்ற சிறிய ஆனால் மணம் குறையாத ஒரு மலரும் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. அன்று நடைபெற்ற விழாவில் முத்தமிழ்க்காவலர் திரு.கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் தலைமை வகித்தார்கள். முன்னாள் அமைச்சர்களான திரு.பக்தவச்சலம், திரு.அவினாசிலிங்கம், திரு.மாணிக்கவேலு ஆகியோரும் ஓ.பி.ஆரின் இனிய நண்பர்களான திரு.என்.எம்.ஆர். சுப்பராமன், அருட்பா அரசு திரு.என்.கிரிதாரிப் பிரசாத், திரு.எஸ்.என்.சோமையாஜுலு போன்ற ஏராளமான தியாகிகளும், அறிஞர்களும் உரையாற்றினர்.

## புகழ் அஞ்சலி

ஓமந்தூரார் மறைந்த செய்தி கேட்டும், அதன் பின்னரும் சமாதிக்கோயில் திறப்பு விழாவின் போதும் நூற்றுக்கணக்கான மக்களும் நிறுவனங்களும் ஓ.பி.ஆருக்கு புகழ் அஞ்சலி செலுத்தினர்.

இவ்வாறு, ஓ.பி.ஆருக்கு புகழ் அஞ்சலி செலுத்தியவர்கள் பலர் அவரை நேரில் அறியார். எனினும் அவர்கள் அவரைப் பாராட்டி, மறைவுக்கு இரங்கியது ஏன்? அவர் தமிழகத்து சான்றோர்களில் ஒருவராக வாழ்ந்தார். காந்தியடிகள் புகட்டிய வாழ்க்கை நெறியைப்பின்பற்றினார். தவ முனிவராகத் திகழ்ந்தார். பொய் பேசாதவர் என்ற அடைமொழியைப் பெற்றார்.

சுவாமி சுத்தானந்த பாரதியார் பின்வரும் கடிதத்தை எழுதினார்.

16.08.1970

**அன்பரீர்,**

இப்போதுதான் தில்லியிலிருந்து வந்தேன். நமது அருளன்பர் இராமசாமி ரெட்டியார் அருட்சோதி



சேர்ந்தது கண்டு திடுக்கிட்டேன். அவர் வடலூருக்கே புது வாழ்வு தந்தார். அவரும் நானும் குருகுலம் நாட்டினோம். குருகுலத்தை காங்கிரி குருகுலம்போல அற்புதமாக வளர்க்க வேண்டும். அதுதான் நாம் அவரது ஆன்மாவுக்குச் செய்யும் கைமாறு, குருகுலமே அவரது குழந்தை. அதுவே அவர் சந்ததி—அருளும் பொருளும் அன்பும் அறிவும், கலையும் தொழிலும் குலுங்க குருகுலத்தை வளர்க்க திருவருட்செல்வர் நா.மகாலிங்கம் மனது வைப்பார் உறுதி. குருகுலத்தில் ஓ.பி.ஆர். உருவச்சிலையை நாட்ட வேண்டும். அதைக்காணுந்தோறும் மக்களுக்கு ஓர் உண்மையான கர்மயோகியின் நினைப்பு வர வேண்டும்.

ஓ.பி.ஆர். ஆன்மா அழத்தக்கதன்று தொழத்தக்கது. அருட்சோதியிற் கலந்த அந்த ஆவியைச் சுற்றி அறிவுக்கதிர் வீச்சு!

**சுத்தானந்த பாரதி.**

திருவருட்பாவுக்கு உரை எழுதியுள்ள சித்தானந்த கலாநிதி, உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை பின்வருமாறு எழுதினார்.

திரு.ஓ.பி.இராமசாமி ரெட்டியார் அவர்கள் 1921ம் ஆண்டிலிருந்தே தீவிர தேசத்தொண்டர். ஆண்டு முதிர முதிர அரசியலுரிமைப் போரில் தெளிவும் ஊக்கமும் பெற்று, ஏனைத்தேசத் தொண்டர்களும், தலைவர்களும் அறிந்து வியக்கத்தக்க அளவில் பணிபுரிந்து தன்னலமற்ற உயர்பண்பினால் மிக உயர்ந்தார். காந்தியடிகளின் கொள்கைகளில் ஆழ்ந்த பற்றும், பணியும் மேற் கொண்டவர்.

இளமை முதலே நேர்மையிலும் நல்லொழுக்கத்திலும் அசையாத உள்ளமும் பொது மக்கள் நலம் பேணல் என்பது நேர்மை நெறியில் செயலும் உடையவர்க்கன்றி இனிது கைகூடாது என்ற கடைப்பிடிப்பும் உடையர். தமிழ் நாட்டரசுக்கு முதலமைச்சராய் பணிபுரிந்து "நேர்மை தவறாத நெறியுடையவர் ஓமந்தூரார்" என்ற சிறப்பைப் பெற்றார். அரசியல் தலைவர் களிடையே தன்னலமும், வஞ்சமும், இலஞ்சமும், பொய்யும் புனை சுருட்டும் பெருகுதல் கண்டு அவர் தம் அரசியலைப்புறக்கணித்து வடலூர் அருட்பிரகாச வள்ளலின் அருள்நெறியைக் கடைப்பிடியாக மேற்கொண்டு வடலூரையே தமது



வாழ்வின் முடிவிடமாகக்கொண்டு தாயவுள்ளத்தாயினர். வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க நிலையம் கண்டு அதன் ஆதரவில் உயர்நிலைப் பள்ளியொன்று நிறுவி அதன் பணி– வகைக்கென்றே தமது பொருளனைத்தும் உரிமை செய்தார்.

அவர் தாம் மேற்கொண்ட நல்லறத்தைப் பொள்ளாச்சி வள்ளல் நா.மகாலிங்கம் அவர்களைத்தலைவராகக் கொண்ட அறங்குழுவினர் வளர்க்குமாறு ஏற்பாடு செய்து தமது 75ம் ஆண்டில் வடலூர் இராமலிங்க வள்ளல் காட்டிய அருட்சோதிப்பெருங்கருணை வெள்ளத்தில் திளைத்தருளுகின்றார்.

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் தொண்டுள்ளம் வாழ்க. அவரது சன்மார்க்க நிலையம் தழைப்பதாக.

**அன்புள்ள**

**ஔவை. துரைசாமி**

## முடிவுரை

பரம்பரை மணியக்காரர் குடும்பத்தில் தேவையான அளவு நிலபுலங்களோடு பிறந்த ஓமந்தூரார் வாழ்நாள் முழுதும் வசதியாக வாழ்ந்திருக்க முடியும்.

பிள்ளைப்பருவத்திலேயே இவர் தேசியக்கிளர்ச்சியில் பங்கு பெற்றார். ஏனைய மனிதர்களிடத்தில் அபிமானம் இல்லாமல் இரக்கமற்ற முறையில் யாராவது நடந்து கொண்டால் இவர் மனம் பதறினார்.

நடுத்தர வயதிலேயே துறவுச்சித்தாந்தம் இவரிடம் குடிக்கொண்டது. எதைப்பிறருக்கு உரைத்தாரோ அதன்படியே தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.

ஏழைகளுக்காகக் கண்ணீர் சிந்தினார். அவர்களிடம் கருணை காட்டினார். ஆனால் உயர் அதிகாரத்தில் இருந்தவர்களுடைய தவறுகளைப் பகிரங்கபடுத்தினார்.

நெற்றிவியர்வை நிலத்தில் விழ பாடுபடும் உழவனுக்கு அரசு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று முழங்கிய முதல் விவசாய அரசியல்வாதி ஓ.பி.ஆரே ஆவார்.

ஓமந்தூராரிடம் நாம் கண்டது என்ன? எதிலும், எப்போதும், ஒழுங்கு, நேர்மை, எளிமை, உண்மை. என்ன நேர்ந்த போதிலும் அவர் ஒழுக்கத்தைத் தம் உயிரைப் போலப் போற்றினார். அவர் வாழ்ந்த வாழ்க்கை மனித சமுதாயமே பெருமைப்படக் கூடியது. இதை அவரோடு ஒரு நாள் பழகியவர்கள் கூட அறிவார்கள்.

நெருப்பைப் போல அவர் வாழ்ந்தார். கடிகாரத்தைப் போல ஒரு மணித் துளியும் பிசகாது செயலாற்றினார்.

இடத்துக்கோ, ஆளுக்கோ தகுந்தபடி அவர் சந்தர்ப்பவாதம் பேசவில்லை. தாளம் போடவில்லை, பின்பாட்டுப்பாடவில்லை.

நாள்தோறும் நாழிகை தோறும், ஓமந்தூரார் தன்னையே தராசில் எடைபோட்டுப் பார்த்துக் கொண்டார். அடக்கம், பணிவு உண்மை என்னும் உயரிய குறிக்கோள்களிலிருந்து இம்மிகூடப் பிறழாமல் இருக்கிறேனா என்று தன்னைத் தானே கண்காணித்து வந்தார்.

பணத்திற்காக, பதவிக்காக, புகழுக்காக, செல்வாக்குக்காக, பட்டத்திற்காக, பத்துப் பேருடைய கைதட்டலுக்காக, அதிகாரத்திற்காக பத்திரிகைகளில் தம் படங்கள் வெளிவர வேண்டும் என்பதற்காக எதையும் செய்யவும், எதையும் இழக்கவும் பக்குவப்பட்டுள்ள மக்கள் மந்தையில் ஓமந்தூரார் ஒரு தனிப்பிறவியாக இருந்தார்.

அஞ்சாநெஞ்சராக, கருணை நிறைந்தவராக, சன்மார்க்கியாக, கொள்கை வேளாக, பொதுமை நோக்காளராக, சமத்துவவாதியாக, அருளாளராக, பண்பாட்டின் பிழம்பாக, தியாகச் சுடராக, வாழ்ந்த ஓமந்தூரார் அணையா ஒளிவிளக்கு ஆவார். அந்த ஒளி மங்காமல் பிரகாசிக்கட்டும், வழிகாட்டட்டும்.

**........முற்றும்.......**

**தொகுத்தவர் முனைவர் டாக்டர்.வீ.செல்வராஜு**

ஆதாரம் : ஆர்.பி.சங்கரன் எழுதிய நூலிலிருந்து



**உனக்கு இன்று ஏற்பட்ட துன்பங்களுக்காக<br>மனம் வருந்தாதே ஏனெனில்<br>அது தான் உனக்கு வருங்காலத்தில்<br>எதையும் தாங்கும் வலிமையான இதயத்தை<br>அளிக்கப் போகிறது துணிந்து செல்<br>வாழ்க்கையை துணிவுடன் வென்று விடலாம்.**

# ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை ஆலோசனைக் கூட்டம்




கடந்த 11.07.2024 மாலை 3.00 மணிக்கு சென்னை ஜாபர்கான்பேட்டையில் ஓ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளை ஆலோசனை கூட்டம் அறக்கட்டளை அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஓ.பி.ஆர். நினைவு தொண்டு அறக்கட்டளையின் தலைவர் திரு.L.தமிழரசன் அவர்கள் தலைமை தாங்கினார். அதுசமயம் நிர்வாக அறங்காவலர் திரு.V.செல்வராஜு அவர்கள் அனைவரையும் வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தார். அறங்காவலர் திரு.V.ஜெயக்குமார் கடந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை வாசித்து ஒப்புதல் பெற்றார்.

ஓ.பி.ஆர். நினைவுத்தொண்டு அறக்கட்டளை தலைவர் திரு.L.தமிழரசன் அவர்கள் தமது தலைமை உரையில், “நம் அறக்கட்டளை பெருமளவில் பொதுமக்களின் வரவேற்பைப்பெற்று வருவது மகிழ்ச்சியை தருகிறது. இதற்கு உறுதுணையாக இருந்துவரும் அறங்காவலர்கள், நன்கொடை யாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிர்வாக அறங்காவலர் திரு.V.செல்வராஜு அவர்கள் ‘தமிழ்நாட்டில் ரெட்டியார்களின் சமூக–கலாச்சாரம் மற்றும் அரசியல் வரலாறு ஓர் ஆய்வு’ என்ற தலைப்பில் ஆய்வு செய்து ரெட்டியார் சமூகத்திற்கு பெருமை சேர்த்திருக்கிறார். அவருக்கு அறக்கட்டளையின் சார்பில் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கு திருச்சியில் மிகச் சிறப்பான முறையில் ஒரு பாராட்டு விழாவை ஏற்பாடு செய்யவேண்டும் என இன்றைய கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

ஓ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளை நடத்தும் கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் மாணவ, மாணவிகள் பயன்பெற்று அரசு பணிகளில் அமர்ந்து வருவது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. அதே வேளையில் ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே என் அவா. அதற் கான விழிப்புணர்வை நம் அமைப்புகளின் மூலம் ஏற்படுத்தவேண்டும். மேலும் தற்போதைய இடப் பற்றாக்குறையை சமாளிப்பதற்கு ஏற்றவகையில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளுக்கு குழு ஒன்றை அமைத்து முடிவெடுக்கலாம்” என்றார்.

தொடர்ந்து அறங்காவலர்கள் தமது கருத்துகளை ஆலோசனையாக வழங்கினர். இதில் அறக்கட்டளையின் எதிர்கால வளர்ச்சி, நம் மாணவ மாணவிகளை மத்திய, மாநில அரசுகள் நடத்தும் போட்டி தேர்வுகளில் பெருமளவில் பங்கு பெற செய்வதற்கான விழிப்புணர்வை அனைத்து மாவட்ட, வட்ட, கிராமக் கிளைகளிலும் உருவாக்க தீவிர பிரச்சாரம் செய்வது என முடிவு செய்ய பட்டது. உண்மையில் போட்டி தேர்வு எழுத ஆர்வமுள்ள, திறமையான ஏழ்மை நிலையில் உள்ள ரெட்டியார் சமூகத்தை மாணவ, மாணவி களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

அண்ணாநகர் திரு.R.ரமேஷ் அவர்கள் தலை மையில் 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இக்குழு எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் அறங்காவலர்கள் திரு.V.செல்வராஜு, திரு.L.தமிழரசன், திரு.S.மோகன், திரு.N.பெரியசாமி, திருமதி.தேவி மோகன், திரு.R.ரவீந்திர ரெட்டி, திரு.K.வாசுதேவன், திரு.P.தாமோதரன், திரு.C.செல்வராஜ், திரு.K.ரெங்கராஜன், திரு.R.காமராஜ், திரு.M.ஜெயப்பிரகாஷ், திரு.P.ஜெயக்குமார், திரு.V.ஜெயக்குமார், திரு.D.மணிவாசகன், திரு.J.அருண்குமார், திரு.N.செல்வராஜு, திரு.R.ரமேஷ்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்கள். நிறைவாக நன்றி உரையுடன் கூட்டம் நிறைவடைந்தது.

# சமூக போராளி டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி



பெண்கள் அனைவரும் ஆளுமை தன்மையோடு இருக்கவேண்டும். பொதுவாக படித்த பெண்களிடம் ஆளுமை தன்மை மிகக் குறைவாகவே உள்ளது. ஆளுமைத்தன்மை தான் பெண்களின் முதுகெலும்பு. படித்த நகரத்து பெண்களை விட படிக்காத கிராமத்துப் பெண்கள் வாழ்க்கையை நன்றாக வாழ்கின்றனர். ஆனால் படித்த பெண்கள் சமுதாயம் என்ன சொல்லுமோ! என்று அஞ்சியே வாழ்கின்றனர். ஆளுமைத் தன்மை இல்லையென்றால் எல்லோரும் ஏமாற்றப் படுவார்கள். அதனால் ஆளுமை மிகவும் அவசியம். அப்படி ஆளுமையோடு வாழ்ந்து மறைந்தவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி.

டாக்டருக்குப் படித்துப் பட்டம் பெற்ற முதல் பெண், இந்திய அரசின் உதவித் தொகை பெற்று வெளிநாடு சென்று உயர்கல்வி பயின்ற முதல் பெண், வெளிநாட்டில் நடந்த அகில உலக மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு அரிய சொற் பொழிவை நிகழ்த்திய முதல் பெண், பிரிட்டிஷ் இந்தியாவின் சட்டசபையில் பதவி வகித்த முதல் பெண், சட்டசபையில் துணைத் தலைவர் பதவி வகித்ததில் உலகிலேயே முதல் பெண், சுதந்திர இந்தியாவின் ஐந்தாண்டு திட்டங்களை வகுத்த சமூக நல அமைப்பின் தமிழ்நாட்டுத் தலைவியாக இருந்த முதல் பெண், அன்னிபெசன்ட் அம்மையார் அவர்களால் உருவாக்கப்பட்ட அகில இந்திய மாதர் சங்கத்தலைவியாக விளங்கியவர், ஆயிரக்கணக்கான குழந்தைகளை ஆதரித்த 'அவ்வை இல்லம்' என்கிற அனாதை இல்லத்தை நிறுவி, அதன் தலைவியாகப் பணியாற்றியவர், பெண்களுக்குச்சொத்து உரிமையும், சம உரிமையும் வேண்டுமென்று குரல் எழுப்பிய முதல் பெண், தேவதாசி முறை ஒழிப்புக்கு முன்நின்ற சமூகப்போராளி, இவ்வளவு சிறப்பிற்குரிய பெண்மணி தான் டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி.

குழந்தை திருமண தடைச்சட்டத்திற்கு வலுசேர்த்த வீராங்கனை. அவர் வெறும் முதல் மருத்துவர் மட்டுமல்ல, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் ஆணிவேர் புரட்சிப் பெண்மணி டாக்டர் முத்துலட்சுமி அம்மையார். திருப்பங்கள் நிறைந்த அவரது வாழ்க்கையின் முக்கிய அம்சங்களை இங்கே தொகுத்து வழங்குகிறோம்.

## பிறப்பு

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பிராமண குலத்தைச் சார்ந்த நாராயணசாமி தன் குலத்தை சாராத சந்திரம்மாள் என்பவரை கடும் சமூக எதிர்ப்புகளுக்கு இடையில் புரட்சிகரமாக கலப்பு மணம் புரிந்து பல சமூக பிரச்சனைகளை எதிர் கொண்டு வென்றவர். இவர்களுக்கு 3 பெண் குழந்தைகள், ஓர் ஆண் குழந்தை என மொத்தம் நான்கு குழந்தைகள். நாராயணசாமி சந்திராம்மாள் தம்பதியரின் மூத்த மகளாக 1886, ஜூலை 30–ம் நாள் பிறந்தவர் முத்துலட்சுமி. தந்தை நாராயணசாமி புதுக்கோட்டை அரசினர் கல்லூரி முதல்வராகவும், கல்வித்துறை இயக்குனராகவும், அரசர் தொண்டைமானின் ஆலோசகராகவும் இருந்தவர். இசைக்கலை யிலும் தேர்ந்தவர். புதுக்கோட்டைக்கு வரும் இசைக்கலைஞர்கள் இவர் பரிந்துரைத்தப் பின்தான் அரசவைக்கு செல்ல முடியும். பழம் பெரும் நடிகர் ஜெமினிகணேசனின் சின்ன தாத்தா முத்துலட்சுமியின் அப்பா. ஆக, ஜெமினி கணேசனுக்கு முத்துலட்சுமி அத்தை முறை. ஜெமினிகணேசன் மீது அன்பு கொண்ட முத்துலட்சுமியின் அப்பா, இறக்கும் முன்பு ஜெமினி கணேசனுக்கும் சில சொத்துகளை எழுதி வைத்து கார்டியனாக முத்துலட்சுமியை நியமித்தார் என்று ஜெமினிகணேசன் தமது சுய சரிதையில் எழுதியிருக்கிறார்.

## இளமைப்பருவம்

முத்துலட்சுமி அவர்கள் குழந்தையாக இருந்த போது, தாய்ப்பால் அருந்தாமல் புட்டிப்பால் அருந்தியே வளர நேர்ந்ததால் மெலிந்த உடலோடு, ஆயுர்வேத மருத்துவ துணையோடு தான் நாட்களை நகர்த்த வேண்டி இருந்தது. எட்டு வயதிலேயே ஆஸ்துமா என்னும் இருமல் நோய் வந்துவிட்டது. முத்துலட்சுமிக்கு அடுத்து பிறந்தவர் ராமையா. உயர்நீதிமன்ற நீதிபதியாய் உயர்ந்தவர். அதற்கு அடுத்து பிறந்தவர் சுந்தரம்மாள். தமிழிலும், வடமொழி யிலும், இசையிலும், சொற்பொழிவிலும் சிறந்தவர். இறுதியாக பிறந்த மகள் நல்லமுத்து. ராணிமேரிக் கல்லூரி முதல்வராகவும், சர்வதேச சங்கத்தில் அமைதி பணியாற்றியவராகவும், இந்திய நாடாளுமன்றத்தில் உறுப்பினராகவும் இருந்தவர். சமூகப் பணிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

## கல்வி

நால்வரில் மூத்தவரான முத்துலட்சுமி நல்ல நினைவாற்றல், கூர்மையான மதியும் கொண்டவர். பெண்கள் கல்விக்கு எதிர்ப்பு

இருந்த காலக்கட்டத்தில் வீட்டில் இருந்தபடியே படித்து தனித் தேர்வாக எழுதி அந்நாட்களில் புதுக்கோட்டை பகுதியில் மெட்ரிகுலேஷன் தேர்வு எழுதிய 100 பேரில் 10 பேர் தேர்ச்சிப்பெற் றிருந்தனர். அவர்களில் முதலாவது வந்தவர் முத்துலட்சுமி. இது புதுக்கோட்டை பகுதி முழுவதும் அப்போது பரபரப்பாக பேசப்பட்டது. கல்வியில் சிறந்து திகழ்ந்தாலும் முத்துலட்சுமிக்கு விரைவில் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என மிகத் துடிப்போடு இருந்தார் அன்னை சந்திரம்மாள். ஆனால் தந்தை



நாராயணசாமி அவர் கல்வியில் அக்கறை கொண்டு புதுக்கோட்டையில் அரசரின் நிபந்தனையோடு புதுக்கோட்டை மகாராஜா கல்லூரிக்கு விண்ணப்பித்தார். அந்த விண்ணப்பமே சலசலப்பை உண்டாக்கியது. ஏனெனில் அதுவரை மகாராஜா கல்லூரியில் ஒரு பெண் படித்ததில்லை. அவர் பிற ஆண் மாணவர் களின் படிப்புக்கெட காரணமாக இருப்பார் என்று கல்லூரி முதல்வர் கருதினார். ஆனால் மகாராஜா பைரவ தொண்டைமான் தலையிட்டு அவர் படிக்க அனுமதித்ததோடு, கல்வி உதவித்தொகையும் வழங்கினார். ஆண்கள் கல்லூரியில் சேர்ந்தார்.

முத்துலட்சுமி அவர்கள் கல்லூரிக்கு குனிந்த தலைநிமிராமல் போவார், வருவார். கூடு வண்டியில் தான் கல்லூரிக்கு சென்றுவருவார். கல்வியை கண்ணென கற்று இன்டெர்மீடியட் தேர்வில் வென்றார். ஆசிரியர்கள் முத்துலட்சுமியின் மேல் நன்மதிப்பு கொண்டிருந்தனர். முத்துலட்சுமியால் ஆசிரியர்களும் மதிக்கப்பட்டனர். பின்னாட்களில் முத்துலட்சுமி அம்மையார் சட்டசபையில் சொற்போருக்கு எதிர்கொண்ட தேசியவாதி தீரர் சத்யமூர்த்தியும் அதே கல்லூரியில் முத்துலட்சுமியோடு பயின்றவர். இன்டெர்மீடியட் தேர்வில் வெற்றிபெற்ற பிறகு உடல்நலம் சற்றே குன்றியிருந்ததால் ஓராண்டு வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டார். அக்கால கட்டத்தில் ஷேக்ஸ்பியர், டெரிசன், ஷெல்லி போன்றவர்களின் நூல்களை கற்பித்தார் தந்தை நாராயணசாமி. அப்போது முத்துலட்சுமியின் தாயாரும் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்தவண்ணம் இருந்தார்.

தன் உடல்நலக்குறைவோடு போராடியவாரே தனது தாயின் சிகிச்சைக்கு முத்துலட்சுமி உதவியாக இருந்தார். அப்போதுதான் நாம் ஏன் ஒரு மருத்துவராகக் கூடாது என்ற எண்ணம் ஒலித்து தீவிரமடைய தொடங்கியது. 1907-ம் ஆண்டு சென்னை மருத்துவக்கல்லூரியில் சேர்ந்து படிக்க தொடங்கினார். கடைசி தங்கை நல்லமுத்து எழும்பூர் கல்லூரியிலும், தம்பி ராமய்யா சட்டக் கல்லூரியிலும் சேர்ந்தனர். இவர்களை கவனித்துக் கொள்வதற்காக தாயாரும் சென்னை வந்து விட்டார். சென்னை, புரசைவாக்கத்தில் குடியிருந்தனர். பின்னர் தாயார் ஊர் நினைவாகவே இருப்பதைக் கண்டு அவரை ஊருக்கு அனுப்பி விட்டு பிள்ளைகள் தங்களை தாங்களே கவனித்துக் கொண்டனர். தந்தையார் அவ்வப்போது வந்து கவனித்துச் சென்றார்.

1912ம் ஆண்டு ஏப்ரலில் மருத்துவப்படிப்பை வெற்றிகர மாக முடித்தார். மருத்துவத்துறையில் அறுவை சிகிச்சை வல்லுனராக பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற சிறப்பை பெற் றார்.

முத்துலட்சுமிக்கு பாராட்டுகள் குவிந்தன. பல மருத்துவமனைகள் இவருக்கு அழைப்பு விடுத்தன. ஆனாலும் மருத்துவக் கல்லூரி பேராசிரியர் கிப்போடின் ஆலோசனையில் பேரில் சென்னை எழும்பூரில் உள்ள பெண்கள், குழந்தைகள் மருத்துவமனையில் பொறுப்பேற்றார். ஓராண்டு காலம் அங்கு பணியாற்றினார். அங்கு பணிபுரிந்த ஆங்கில பணிப்பெண்களின் காழ்புணர்ச்சியால் அங்கு நீடிக்க இயலாமல் போனது. ஆயினும் அக்காலத்தில் சமூக சேவை சங்கம் ஒன்றில் இணைந்து சென்னை வாழ் குடிசைப்பகுதி பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மருத்துவம் பார்த்ததோடு சுகாதார விழிப்புணர்வையும் ஊட்டினார். மேலும் எழும்பூர் விதவைப்பெண்களுக்கான சங்கத்திலும், தாழ்த்தப்பட்ட மகளிர் விடுதியிலும், ராணிமேரிக் கல்லூரி மகளிர் விடுதியிலும் மருத்துவராக தொண்டாற்றி வந்தார். இத்தருணங்களில் தனது சமகால சமூகப் பிரச்சனைகளை வேர் வரை உணர்ந்தார். பின்னர் புதுக்கோட்டைக்கு சென்று அங்குள்ள மருத்துவமனையில் பணியாற்றினார். புதுக்கோட்டை சுற்றுவட்டார கிராம மக்கள் அனைவரும் அவரால் பலன் பெற்றனர். 1914 மீண்டும் சென்னைக்கு திரும்பினார். சொந்தமாக மருத்துவமனை திறந்து சிகிச்சை அளித்தார். மருத்துவ சேவையில் புகழ்பெற்று விளங்கினார்.

## திருமணம்

இந்நிலையில் அம்மையாரின் திருமண பேச்சு வலுவடைந்தது. முத்துலட்சுமி அம்மையாருக்கு திருமணத்தில் நாட்டமில்லை. மாறாக பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்துவதற்கான சடங்குதான் திருமணம், ஆணுக்குப்பெண் அடிமையாக கூடாது, ஒரு பெண் திருமணம் செய்து கொள்கிறாள் என்றால் அவள் தன்னை ஒரு ஆண் ஜெயிக்க விட்டுவிட்டாள் என்றுதான் பொருள் என்ற புதுமைப் பெண்ணுக்குரிய கருத்தை கொண்டிருந்தார். பெற்றோருக்கு இக்கருத்து அதிர்ச்சி தருவதாக இருந்தது. இந்நிலையில் மருத்துவம் படித்த பகுத்தறிவாளரான **சுந்தர ரெட்டியார்** லண்டனில் படித்து FRCS பட்டம் பெற் றவர் முத்துலட்சுமி அம்மையாரை தனக்கு துணைவியாக தகுதி பெற்றவர் என்ற கருத்தோடு அவரை மணக்க விரும்புவதாக தெரிவித்தார். டாக்டர் சுந்தர ரெட்டி யாரென்றால் பின்னாளில் சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த திவான் பகதூர் அகரம் சுப்பாராயலு ரெட்டியாரின்

சகோதரியின் மகன். தன் மகளை மணமுடிக்காத வருத்தத்தில் விலகி நின்றார் டாக்டர் சுப்பாராயலு ரெட்டியார். பெற்றோரின் வற்புறுத்தலின் அடிப்படையில் சுந்தரரெட்டியை சந்திக்க முத்துலட்சுமி ஒப்புதல் அளித்தார். உங்களுக்கு சமமான மரியாதையை எனக்கும் நீங்கள் தர வேண்டும், என்னுடைய சேவை விருப்பங்கள் எதுவாயினும் அதற்கு நீங்கள் குறுக்கே நிற்க கூடாது, சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும் என்ற அம்மையாரின் நிபந்தனைகளை ஏற்றார் சுந்தர ரெட்டியார். திருமணம் தனது 28வது வயதில் 1914 ஏப்ரலில் பிரம்ம ஞான சபையின் சட்டத்தின்படி மூடநம்பிக்கைகளுக்கு இடமில்லாமல், சடங்குகளும் இல்லாமல் மிக எளிய முறையில் சாதியை மறுத்து திருமணம் செய்து கொண்டார்.

இனிதான மணவாழ்வில் ராம்மோகன், கிருஷ்ணமூர்த்தி என்ற இரண்டு மகன்களை பெற்றிருந்தார். இவர்களில் மூத்தவர் ராம்மோகன் டெல்லியில் திட்டக்குழு இயக்குனராக உயர்ந்தவர், நான்கு வயது இளையவர் கிருஷ்ணமூர்த்தி அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தின் காப்பாளராக சேவை ஆற்றியவர். திருமணம் நடந்த காலக்கட்டத்தில் ராமநாத புரத்தில் மருத்துவராக பணியாற்றி வந்த டாக்டர் சுந்தர ரெட்டிக்கு சென்னை மருத்துவக் கல்லூரியில் உதவி பேராசியராக பணிமாற்றலாகி, குடும்பம் புதுக்கோட்டையில் இருந்து சென்னைக்கு இடம்பெயர்ந்தது. அம்மையார் சென்னையில் மீண்டும் சமூகப்பணியில் முழு வேகத்தில் இறங்கினார்.

## இந்திய மாதர் சங்கத்தில் பங்கேற்பு

1917ல் அன்னிபெசன்ட் அம்மையார் மற்றும் மார்கரெட் கசான்ஸ் அம்மையார் ஆகியோரால் தொடங்கப்பட்ட இந்திய மாதர் சங்கத்தில் முத்துலட்சுமி அம்மையாரும் பங்கு பெற்று துணையாக இருந்து பணியாற்றினார். 1920 மாதர் சங்கத்தின் சார்பில் கீழ்ப்பக்கத்தில் குழந்தைகள் உதவி சங்கத்தை தொடங்கி நடத்தினார்கள். அதன் குறிக்கோள் குற்றம் செய்த இளம் வயது குழந்தைகளுக்கு காவல்துறையின் உதவியோடு அடைக்கலம் கொடுத்து நன்னடத்தை மிக்கவர்களாக ஆக்குவது மற்றும் மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள், வீட்டை விட்டு வெளியேறிய இளம்பெண்கள் ஆகியோருக்கும் தாய்மடியாக திகழ்வது, 19ம் நூற்றாண்டில் மகாத்மா ஜோதிராவ்புலேவும், அவரது துணைவியார் சாவித்ரிபாய் புலேவும் செய்த அதே தொண்டை இவர்களும் தொடர்ந்தனர்.

1917ல் இருந்து 1926 வரை முழுமையாக அம்மையார் இந்திய மாதர் சங்கத்தில் களப் பணி–யாற்றினார். சாரதா பெண்கள் மன்றம், இந்திய பெண்கள் சமாஜம் என்று பலப்பல மன்றங்களும், இல்லங்களும் அம்மையாரின் பணிகளால் உருவாக்கம் பெற்று பலரால் நடத்தப்பட்டது. புகழ்பெற்ற டிவிஎஸ் நிறுவனத்தின் தலைவர் டி.வி.சுந்தரம் ஐயங்காரின் மகள் டாக்டர் சௌந்திரம் இராமச்சந்திரன் அவர்கள் காந்தி கிராமம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கி அதன் மூலம் காந்தியின் நெறிகளை பரப்ப விருப்பம் கொண்ட போது அம்மையார் தான் அவரை காந்தியிடம் அழைத்து சென்று அனுமதியும், ஆசியையும் பெற்று தந்தார். இன்று அது ஆலமர–மாக இருப்பதை காண்கிறோம்.

இந்நிலையில் 1922ல் முத்துலட்சுமி அம்மையாரின் குடும்பம் ராயப்பேட்டையில் வாடகை வீட்டில் வசித்து வந்த போது தன் இளைய சகோதரி சுந்தரம்மாளையும் தன்னுடனே அழைத்து வந்து படிக்க வைத்து கொண்டிருந்தார். தங்கை சுந்தரம்மாள் திடீரென சிறிது சிறிதாக உடல்நலிவுற்றுக்கொண்டே வந்தார். மருத்துவர்கள் பரிசோதித்து திருமணம் செய்தால் சரி ஆகிவிடும் என்றனர். சிற்பக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்த கலைஞரான தேவல் என்ற மராட்டிய இளைஞரோடு திருமணமும் நடைபெற்றது. ஆயினும் உடல்நலம் பெறவில்லை. தீவிரமாக பரிசோதித்ததில் சுந்தரம்மாள் புற்றுநோய்க்கு ஆளாகி இருப்பது தெரியவந்தது. அதுவும் நோய் முற்றிவிட்டிருந்தது. ஓராண்டு காலம் சிறப்பு மருத்துவர்களை எல்லாம் வைத்துப்பார்த்தார். கல்கத்தாவுக்கு அழைத்து சென்று டாக்டர் போஸ் மருத்துவமனையில் பல மாதங்கள் தங்கியிருந்து பெரும் பொருட்செலவில் சிகிச்சை அளித்தும் பார்த்தார் பலனில்லை. 1923ம் ஆண்டு சுந்தரம்மாள் மரணமடைந்தார். தங்கையின் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தவர் முத்துலட்சுமி அம்மையார். சுந்தரம்மாளின் மறைவு தந்த துக்கத்திலிருந்து மீள முடியாமல் தவித்து நாளொன்றுக்கு 4 மார்த்தியா ஊசிகளை போட்டுக் கொண்டாராம் அம்மையார். புற்றுநோய்க்கென்று ஒரு ஆராய்ச்சிக்கழகத்தை சென்னையில் நிறுவ வேண்டும் என்ற உறுதி அதிலிருந்துதான் எழுந்தது. உடன்பிறந்த பாசம் தந்த வலியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மனதை தேற்றி வந்த அம்மையார் சமூகப்பணிகளையே தனக்கென மருந்தாக கண்டார்.

இந்திய மாதர் சங்கத்தில் மூலமாக பெண்களுக்கென முதியோர் கல்வி, பெண்கள் முன்னேற்றம், சொத்துரிமை இவை குறித்தெல்லாம் கூட்டங்கள் வாயிலாக விழிப்புணர் வூட்டினார். குழந்தை திருமணத்தடை சட்டத்திற் காக கருத்துருவாக்கம் செய்தார். கட்டாய பள்ளிகளை தோற்றுவிக்க இயக்கங்களை நடத்தினர். வைசிராய், ஆளுநர்கள், அமைச்சர்கள் உள்ளிட்டோரிடம் பெண்ணுரிமை கோரிக்கை களை அறிக்கைகளாக தூதுக்குழுக்கள் அமைத்து அவைகள் வாயிலாக அளித்தார். சென்னையில் முதன் முதலில் பெண்கள் நீதிபதியாக நியமனம் பெறவும் திட்டங்களை உருவாக்கினார். புனேயில் அனைத்திந்திய பெண்கள் மாநாட்டை நடத்த முழு முயற்சி மேற்கொண்டார். இந்த மாநாடுதான் ஆசிய பெண்கள் மாநாட்டிற்கு முன்னோடியாய் அமைந்தது. இந்நிலையில் லண்டன் மாநகரில் குழந்தைகள் மற்றும் மகளிர் நோய்களுக்கான ஆராய்ச்சி படிப்பிற்காக நீதிக்கட்சி தலைவர்களில் ஒருவர் அந்நாளில் சென்னை மாநில முதலமைச் சராக பனகல் அரசர் முத்துலட்சுமி அம்மையாரை அனுப்பி வைத்தார். 1925ம் ஆண்டு கணவர் மற்றும் குழந்தைகளோடு லண்டனுக்கு சென்று அம்மாநகரில் செல்ஷியா மருத்துவமனையில் தன் பயிற்சியை தொடங்கினார் அம்மையார். ராயல்



புற்றுநோய் மருத்துவமனையில் சர்.எர்னெஸ்ட் மைலேஸ் என்பவரின் வழிகாட்டுதலில் புற்றுநோய் பற்றிய ஆய்வையும் மேற்கொண்டார். 1926ம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் முதன் முறையாக 43 நாடுகள் கலந்துக் கொண்ட அகில உலகப்பெண்கள் மாநாடு நடைபெற்றபோது அதில் இந்திய மாதர் சங்கத்தின் சார்பில் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் உரையில் மேலை நாடு களில் பெண்களுக்கு இருக்கும் அனைத்து சுதந்திரங்களும் இந்தியாவில் இருக்கும் பெண்களுக்கும் கிடைக்க பாடுபடப்போவதாக உறுதி ஏற்றார். அதை வெளிநாட்டினர் பலரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

இந்நிலையில் லண்டனில் அம்மையார் இருக்கும் போதே தம்பி ராமையா மறைந்துவிட்ட துயர செய்தியும் வந்தது. நால்வரில் ஏற்கனவே சகோதரி சுந்தரம்மாள் மறைந்தபின்பு இப்போது தம்பியும் மறைந்ததை கேட்டு துடித்து போனார். ஆயினும் அங்கிருந்த இந்தியா தூதர் இந்தியாவுக்கு சென்றுவருவதால் அவருக்கு ஏற் படும் இடறுகளை விளக்கி, பயிற்சியை முடித்த பின்செல்லுமாறு அறிவுறுத்தினார். மற்றொரு சகோதரியான நல்லமுத்து அவர்களும் அப்போது லண்டனில் தான் பொருளாதார பல்கலை கழகத்தில் பயின்று கொண்டிருந்தார். இங்கிலாந்தில் புற்றுநோய்க்கான ஆராய்ச்சியை முடித்துவிட்டு இந்தியாவிற்கு திரும்பினார்.

## சட்ட மேலவை துணைத் தலைவர்

இந்திய மாதர் சங்கம் இவரை அரசியல் களத்திற் குள் இறக்கிவிட்டது. முத்துலட்சுமியின் வீரமும், விவேகமும், அவரை இந்தியா திருநாட்டின் முதல் சட்டசபை உறுப்பினராக ஆக்கியது. 1926ம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை உண்டு என்று அறிவிக்கப்பட்டது. இதனால் மகளிர் அமைப்புகள் டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரை தேர்ந்தெடுக்க விரும்பினர். அம்மையாரும் மேலவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். எவ்வித போட்டியும் இன்றி துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அது நாள் வரையில் உலகிலேயே முதல்முறையாக சட்டமன்றத்தில் துணைத்தலைவராக பதவி வகித்த ஒரே பெண்மணி அம்மையார்தான். 1927 முதல் 1930 வரை இவர் சென்னை மாகாணத்தின் சட்ட மேலவை உறுப்பினராகவும், துணைத்தலைவராகவும் இருந்தார். பதவியை வெறுமனே அலங்கரித்துக் கொண்டிருந்தவரல்ல முத்துலட்சுமி அம்மையார். பதவியை பயன்படுத்தி பல திட்டங்கள் அமலாக்க காரணமாக இருந்தவர். விபச்சார தடுப்புச்சட்டம், பெண்களின் திருமண வயது சட்டம் போன்றவை இவரால் நிறைவேறின. மேலும் இவரது முயற் சியால் தான் 1947ல் தேவதாசி ஒழிப்புச்சட்டம் என்ற பெயரில் சட்டமானது.

இவற்றில் குறிப்பிடத்தக்கது தேவதாசி ஒழிப்புச் சட்டம். அந்நாட்களில் கோயில்களில் இளம்பெண்களை இறைவனுக்கு அடிமை என்ற பெயரில் பொட்டுகட்டிவிடும் வழக்கத்தின் மூலம் மிட்டாமிராசுகள் அவர்களை சீரழித்து வந்தனர். இதற்கெனவே ஒரு சமூகம் இரையாக்கப்பட்டு வந்தது. இம்முறையை ஒழிக்க தனது சட்டமன்ற பொறுப்பை திறம்பட பயன்படுத்தினார் அம்மையார். 1929ம் ஆண்டு பிப்ரவரி 2ம் நாள் அன்று தேவதாசி முறை ஒழிப்பிற்கான சட்ட வரைவு மசோதாவை அம்மையார் சட்டப்பேரவை யில் கொண்டுவந்தார். சட்டமன்றத்தில் தேவதாசி முறை ஒழிப்பு பற்றி விவாதம் நடைபெற்றபோது நாவலர் சத்தியமூர்த்திக்கும், அம்மையாருக்கும் சொற்போர் நடந்தது. சாஸ்திரங்களுக்கு எதிராக இருந்து நரகத்திற்குச் செல்வதைவிட, சட்டத்திற்கு எதிராக இருந்து சிறைக்குப் போக விரும்புவதாக கூறி சத்தியமூர்த்தி எதிர்த்தார். மேலும் இம்மசோதாவினால் மதத்திற்கு கேடு வரும் என்றும், இதை நிறுத்தினால் இதன் தொடர்ச்சியாக பெரியாரும் வரதராஜூலு நாயுடு போன்றோரும் அர்ச்சகர் தொழிலை நிறுத்த சட்டம் செய்ய முயல்வர் என்றும் வாதிட்டார். சுதந்திரப் போராட்டத்தில் எல்லாம் தீரராக இருந்தவர். சீர்திருத்தத்தில் சிதைவுற்றவராக இருந்து விட்டார் சத்தியமூர்த்தி ஐயர். தேசியத்தை போற்றிய 'சுதேசமித்திரன்' இதழ் கூட இவ்விஷயத்தில் தேவதாசி தொழிலுக்கு ஆதரவு தெரிவித்து பிசகாக எழுதி வெளிப்பட்டு நின்றது. தேவதாசி முறையின் மூலம் அப்பெண்களுக்கு மோட்சபிராப்தி கிடைக்கும் என்றும், அதனால் அது நீடிக்க வேண்டும் என்றும் வாதாடிய சத்தியமூர்த்தி அய்யர், அது பெருமைமிக்க பணி என்றும் கூறினார். அம்மையார் குறுக்கிட்டு அப்படியானால் அந்தப்பணிக்கு உங்கள் வீட்டுப் பெண்களை அனுப்புவீர்களா? அவர்களுக்கு மோட்சம் கிடைக்கட்டுமே என்று கேட்டு சத்தியமூர்த்தியின் வாயை அடக்கினார். இன்றும் சாட்சியாக சட்டமன்ற குறிப்புகள் நிற்கின்றன. முத்துலட்சுமி அம்மையாருக்கு தேவதாசி ஒழிப்பு எண்ணம் வர கண்ணால் கண்ட ஒரு நிகழ்ச்சி தான் காரணம். புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோயில் வழிபடச் சென்றபோது 12 வயது பெண்ணை கோயில் குளத்தில் நீராட வைத்து அலங்காரம் செய்வித்து மேளத்தாளத்தோடு அழைத்துச் சென்றனர். பின் கோயிலுக்கு காணிக்கையாக நேர்ந்து விட்டு பொட்டுகட்டி விட்டனர். கோவிலில் உற்சவம் வரும்போது ஆடியும், பாடியும், அபிநயம் பிடித்தும் வந்தார் அந்த சிறு பெண். அப்பெண்ணை போன்ற சிறு பெண்கள் தானே பின்னாட்களில் பொது மகளிர் ஆகின்றனர் என்று மனம் வெதும்பினார் அம்மையார். அதன் விளைவாகத்தான் தேவதாசி முறையை ஒழிப்பதில் தீவிரம் காட்டினார். தேவதாசி முறை ஒழிப்பு டாக்டர் முத்துலட்சுமி அம்மையாருக்கு, பெரியார், திருவிக, பனகல்



அரசர், டி.எம்.நாயர், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் போன்றோர் ஆதரவளித்தனர். காந்தியாரும் “Young India” இதழில் ஆதரவு தெரிவித்து எழுதினார். பால்ய விவாகம் போன்ற சமூக கேடுகள் நீங்க காங்கிரஸ்காரர்கள் பெரும் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று முத்துலட்சுமி அம்மையார் மிகச்சரியாக சொன்னார் என்று எழுதினார் காந்தியார். ஏற்கனவே 1865 ஆம் ஆண்டிலிருந்து 60 ஆண்டு காலமாக இப்பிரச் சனைக்கு எதிரான கிளர்ச்சிக்கு ஓரளவிற்கு தொடக்கம் இருந்தும்கூட முத்துலட்சுமி அம்மையார் கொண்டு வந்த தீர்மானத்தை நீர்த்துப்போக வைக்கும் நோக்கோடு பொதுஜனம் அபிப்ராயத்திற்கு விடவேண்டுமென முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேறியது. பெரியார் இவற்றை எல்லாம் சொல்லி நீதிகட்சியினரையும், காங்கிரஸ் கட்சியினரையும் கடுமையாக விமர்சித்து 1930ல் குடியரசு இதழில் ஆதரவாக எழுதினார். ஒரு வழியாக மிகப்பெரிய எதிர்ப்புகளும் விவாதங்களுக்கும் இடையில் மசோதா நிறைவேறியது. தேவதாசி முறை ஒழிப்புக்கு பிறகு அவர்களை பராமரிப்பது யார் என்று சில விவாதங்கள் தொடர்ந்தன. முத்துலட்சுமி அம்மையாரே அவர்களை சேவா சமாஜத்தில் சேர்த்து நல்வாழ்விற்கான வழியை அமைத்துக் கொடுப்பதாக சொன்னார். இவ்வளவு சிரமப்பட்டு அம்மையார் ஒரு முறைக்கு மும்முறை மசோதாவை கொண்டு வந்த நிலையிலும் மாநில ஆளுநர் மசோதாவில் கையெழுத்திட மறுத்து விட்டார். எதிர்ப்பாளர்களின் கரங்கள் ஆளுநர் மாளிகை வரை நீண்டு இருந்ததே இதற்கு காரணம். இங்கே விட்டது அங்கே பிடித்துக் கொண்டார்கள் என்றும் பேசப்பட்டது. 1947-1949 வரையில் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் சென்னை மாகாண முதல்வராக இருந்த காலத்தில் தான் பொட்டுகட்டும் தேவதாசி முறைக்கு முழுமையாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. 1947ல் நிறைவேற் றப்பட்ட சட்டத்திற்கு பெயர் சென்னை தேவதாசிகள் ஒழிப்பு சட்டம் என்பதாகும்.

முத்துலட்சுமி அம்மையார் தேவதாசி முறை ஒழிப்பு மசோதாவை கொண்டுவந்த 1929ம் ஆண்டில் முதல் சுதந்திர போராட்ட இயக்கம் வீறுகொண்டு எழுந்தது. அந்நிய துணிகள் புறக்கணிப்பு, கள்ளுகடை எதிர்ப்பு மறியல், உப்பு சத்தியாக்கிரகம் இயக்கம் ஆகிய போராட்டங்களை காந்தியடிகள் தொடங்கினார். டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் அப்போது **‘ஸ்ரீதர்மா’** என்ற பத்திரிகையை நடத்தி வந்தார். அந்த பத்திரிகையில் நாட்டுக்காகவும் பெண்களுக்கும் உரிமை கோரி வீரம் கொப்பளிக்க எழுதினார். **“MY EXPERIENCE AS A LEGISLATOR”** என்ற நூலை 1930ல் எழுதி வெளியிட்டுள்ளார். அதில் பெண்கள் வீட்டிற்கும், ஆண்கள் அரசுக்கும் மட்டுமே படைக்கப் பட்டவர்கள் என்ற எண்ணத்தை ஏற்க மறுப்பதாக தெரிவிக்கும் இவர், தேசத்தின் நல்வாழ்வை மேம்படுத்துவதில் பெண்கள் தங்கள் ஆண்களுடன் ஒத்துழைக்கமுடியும் எனவும், சகோதரிகள் அனைவரும் அனைத்து துறைகளிலும் பணியாற்ற முன்வர வேண்டும் என தனது அறிமுக உரையில் குறிப்பிடுகிறார்.

1930ம் ஆண்டு மே மாதம் 8ம் நாள் காந்தியடிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தன் மேலவை உறுப்பினர் பதவியை துறந்தார். அதற்கு ஓர் ஆண்டிற்கு முன்பு அதாவது 1929 ஆகஸ்டில் இலங்கைக்கு அழைப்பின் பேரில் சென்று அம்மையார் பௌத்த கழகங்கள், இலங்கை மகளிர் மன்றம், இஸ்லாமிய சங்கம் ஆகியவற்றின் சார்பில் நடத்தப்பட்ட கூட்டங்களில் எல்லாம் கலந்து கொண்டு பெண்கள் உரிமை பாதுகாப்பு குறித்த சொற்பொழிவுகளை நடத்தினார். சென்னை கீழ்ப்பாக்கத்தில் இளம் பெண்களின் பாதுகாப்பிற் காக ஆதரவற்றோர் இல்லம் ஒன்றை “Retreat” என்ற பெயரில் தொடங்கினார் நாள்தோறும் காலையில் இரண்டு மணி அம்மகளிர் இல்லத்திற்கு நேரம் ஒதுக்கினார்.

இதற்கிடையே 1928ம் ஆண்டு மேனாட்டுக் கல்வி முடித்துவிட்டு சர்வதேச சங்கத்திலும் பணி–யாற்றி விட்டு சென்னைக்கு திரும்பினார் முத்துலட்சுமி அம்மையாரின் தங்கை நல்லமுத்து அம்மையார். சென்னைக்கு வந்ததும் அரசினர் லேடி வெலிங்டன் கல்லூரியில் உளவியல் விரிவுரையாளராக பொறுப்பேற்றார். அப்பொழுது அந்தக் கல்லூரியை சேர்ந்த கல்வியில் ஊக்கமுடைய இரண்டு பெண்களுக்கு விடுதியில் இடம் அளிக்க கல்லூரி நிர்வாகிகள் மறுத்து விட்டனர். இதனால் மனம் கலங்கிய நல்லமுத்து அம்மையார் சகோதரி முத்துலட்சுமி அம்மையார் இடம் அந்த பெண்களை தமது வீட்டிலேயே தங்க வைத்து படிக்க வைக்கலாம் என்று கருத்து தெரிவித்து சம்மதிக்க வைத்தார். சாந்தோம் நெடுஞ்சாலையில் இலக்கம் 28ல் இருந்த இல்லத்திலேயே தங்கி படிக்க ஏற்பாடு செய்தார் முத்துலட்சுமி அம்மையார். இந்த தொடக்கம்தான் அந்த இல்லத்தை 1940 **‘அவ்வை இல்லம்’** மாக மலர செய்தது. இல்லத்தில் கௌரவ காவலரானார் முத்துலட்சுமி அம்மையார். காப்பாளரானார் நல்லமுத்து அம்மையார். நீதியையும் தர்மத்தையும் எதிர்த்து உருவாக்கப்பட்ட புரட்சிகரமான அமைப்பு அது. தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி, ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, முதியோர் பிரிவு, கைத்தொழில் பயிற்சி பிரிவு, செவிலியர் பயிற்சிப் பிரிவு, கிராம மருத்துவ சேவைப்பிரிவு, குறைந்த வருமானம் கொண்ட பெண்கள் தங்கும் விடுதி ஆகியவற்றையெல்லாம் கொண்ட நிறுவனமாக இன்றைய “அவ்வை இல்லம்” விரிந்து நிற்கிறது.



அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை அம்மையார் அமைப்பதற்கு பின்னணியாக அமைந்த தங்கையின் மரணம் என்னும் சோக நிகழ்வை குறித்து ஏற்கனவே பார்த்தோம். அதன்பிறகு லண்டனில் கற்று முடித்து சென்னை திரும்பியவர் தொடர்ந்து செல்வந்தர்களை சந்தித்து புற்றுநோய் ஆராய்ச்சி கழகம் நிறுவபடவேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தி வந்தார். 1935 சென்னை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நடைபெற்ற போது அதில் இந்திய பெண்கள் கழகத்தில் 6 பேரின் கையெழுத்துகளோடு கூடிய தீர்மானமொன்றை ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் நினைவு நிதிகுழுவிடம் அளித்தார். தொடர்ந்து பொதுக்கூட்டங்களையும் கண்காட்சியும் நடத்தினார். இந்திய பெண்கள் கழகம் புற்றுநோய் நிதியையும் தொடர்ந்து திரட்டி வந்தது. 1951 ஏப்ரல் 8 ஆம் நாள் புற்றுநோய் ஒழிப்பு நாளை மைய அரசு நடத்தியது. 1952 அக்டோபரில் பிரதமர் ஜவகர்லால் நேரு **புற்றுநோய் ஆராய்ச்சி மையத்திற்கு** அடிக்கல் நாட்டினர். இந்திய அரசு ஒரு லட்சம் ரூபாயும், நல்வாழ்வு அமைச்சகம் இரண்டு லட்ச ரூபாய் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்திற்கு மானியமாக தந்தன. 1954ல் 12 படுக்கைகளோடு தொடங்கப்பட்ட புற்றுநோய் மருத்துவமனை இன்று புற்றுநோய் ஆய்வு மையம், புற்றுநோய் தடுப்பு மற்றும் பொதுத்துறை அறிவியல் துறை கல்லூரி என வளர்ந்து நிற்கிறது. வருடத்திற்கு ஏறத்தாழ ஒரு லட்சம் நோயாளிகள் பயன் பெறுகின்றனர், டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் பெரு முயற்சியால் உருவான புற்றுநோய் ஆராய்ச்சி கழகம் இன்று இந்தியாவிலேயே சிறந்ததாக விளங்குகிறது. மும்பையில் உள்ள டாடா நினைவு மருத்துவமனைக்குப் பிறகு இந்தியாவிலேயே புற்று நோய்க்காக உருவாக்கப்பட்ட இரண்டாவது சிறப்பு மருத்துவமனை அடையாறு புற்றுநோய் மருத்துவமனை.

1929-ல் வட்டமேசை மாநாடு கூட்ட போவதாக அறிவிப்பு வெளியிட்டவுடன் மகளிர் அமைப்புகள் அதில் பெண்களுக்கும் இடமளிக்க வேண்டும் என்று குரல் எழுப்பின. வட்டமேசை மாநாடு வாக்குரிமை குழுவில் அம்மையார் இடம் பெற்றார். பெண்கள் உரிமைக்கான ஐந்து அம்சத்திட்டத்தை சமர்ப்பித்து அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடந்த பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு சர்வதேச மகளிர் மாநாட்டில் 'பெண்கள் பங்கு' என்ற தலைப்பில் கருத்தான சொற்பொழிவை ஆற்றினார். அக்காலத்தில் புகழ்பெற்ற தேசபக்த டாக்டர்.நஞ்சுண்டராவ் அவர்கள் அரசியல் பிரமுகர்களுக்கு விருந்து வைத்தார். அக்கூட்டத்தில் முத்துலட்சுமி அம்மையாரை பங்கேற்க வைத்து அப்பிரமுகர்களுக்கு அறிமுகம் செய்வித்தார். ஒரு சமயம் விருந்துக்கு வந்திருந்த பாரதியார் தாம் நடத்தும் இந்தியா பத்திரிகைக்கு பெண்ணுரிமை பற்றிய கட்டுரைகள் தொடர்ந்து எழுதுங்கள் என்று அம்மையாரிடம் கேட்டுக் கொண்டபோது அளவில்லா மகிழ்ச்சி அடைந்தார் அம்மையார். 1931 இன்றைய பாகிஸ்தான் லாகூரில் நடைபெற்ற ஆசிய மாநாட்டிற்கு தலைமை வகித்து சிறப்பித்தார். சென்னை மாகாண சமூக நல வாரியத்தின் தலைவராக வும் செயல்பட்டார். 1937 "Alter Women" அதாவது சென்னை மாநகர தலைமையாளர் என்ற உயரிய பதவி பெற்ற முதல் பெண்மணி என்ற பெருமையும் பெற்றார்.

அப்பதவியில் இருந்தபோது தொழுநோய் பாதித்த பிச்சைக்காரர்களுக்கு தனி விடுதியையும், காப்பகத்தையும் கட்டினார். சென்னை மாநகரத்தின் எல்லையை விரிவுபடுத்தினார். குடிநீர் வசதியை பெருக்கினார். ஆரம்பத்தில் ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது மீண்டும் மேலவை உறுப்பினராக வேண்டுகோள் விடப்பட்டது. புற்றுநோய் மருத்துவமனை வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டிருந்ததால் அந்த பதவியை நிராகரித்தார். தன் மருத்துவ மற்றும் சமூக வாழ்வில் வெளிப்பாடாக பத்துக்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியிருக்கிறார். டாக்டர்.முத்துலட்சுமி அம்மையாரின் தொண்டுகளை பாராட்டி சிறப்பிக்கும் விதமாக மைய அரசு **பத்மபூஷன்** பட்டம் அளித்தது. அப்போது சென்னையில் 30 மகளிர் மன்றங்கள் இணைந்து இவருக்கு பாராட்டு விழா எடுத்து மகிழ்ந்தனர்.

டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் எந்த கட்சியும் சார்ந்து இருக்கவில்லை, எந்த சமூகத்தையும் சார்ந்திருக்கவில்லை. முத்துலட்சுமி அம்மையாரின் அறிவுக்கு எட்டாமல் இந்தியாவில் எங்கும் மகளிர் தொடர்பான எந்த நிகழ்வும் நடைபெற்றதில்லை என்று உறுதியாக கூறலாம். இன்றும் சென்னை அடையாறில் டாக்டர் முத்துலட்சுமி சாலை என்றும், பூங்கா என்றும் அம்மையாரின் பெயர் சொல்லிக்கொண்டே இருக்கின்றன. 1989ல் அன்றைய முதல் அமைச்சர் மாண்புமிகு மு.கருணாநிதியின் ஆட்சியில் **டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித்திட்டம்** தொடங்கப்பட்டு இன்றும் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது.

பெண்ணிய பெரியாராக புகழ் பரப்பிய அப்பெருமகனார் தன் 82வது வயதில் 1968 ஜூலை 22ம் நாள் அடையார் இல்லத்தில் இயற்கை எய்தினார். அப்போது வானொலியில் பேசிய இந்திராகாந்தி, முத்துலட்சுமி ரெட்டி, சரோஜினி நாயுடு போன்ற பெண்கள் இல்லாமல் போயிருந்தால் நாம் இன்று உயர்ந்த இடங்களைப் பிடித்திருக்க முடியாது என்று புகழாரம் சூட்டினார்.

இனியேனும் புரட்சி என்ற சொல்லை தன் பெயருக்கு முன் போட்டுக்கொள்ள விரும்பும் ஒவ்வொரு மனிதரும் இப்புனிதரின் வாழ்க்கையை வாசித்து விட்டு முடிவெடுக்கலாம்.

**தொகுத்தவர் : R.புகழேந்திரன், கௌரவ ஆசிரியர் , ரெட்டி மலர்**



24 வீடு பெயர் கொண்ட அயோத்தி ரெட்டியார்களுக்கு பாத்தியப்பட்ட **கூவலபுரம் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஜீவசமாது ஆலய மஹா கும்பாபிஷேகம்** கடந்த ஆண்டு 25.06.2023 அன்று மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், கூவலபுரத்தில் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக 12.07.2024 அன்று இந்த ஆலய வருஷாபிஷேகம் காலை 9.00 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கோவில்பட்டி K.R.கல்வி குழுமங்களின் தலைவர் திரு.K.R.அருணாச்சலம் ரெட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்.

விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்க தலைவர் திரு.பெ.ராமகிருஷ்ணன் ரெட்டியார், செயலாளர் திரு.A.கிருஷ்ணசாமி, பொருளாளர் திரு.R.லட்சுமணபெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிர்வாக குழு உறுப்பினர்கள் கழுகுமலை திரு.S.மகேஷ் ரெட்டியார் விளாத்திகுளம் திரு.அய்யன்ராஜ் ரெட்டி, விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்க முன்னாள் தலைவர் திரு.R.V.செல்வக்குமார் ரெட்டியார், தமிழ்நாடு ரெட்டி நல சங்க வடக்கு மண்டல தலைவர் திரு.R.ஜெயராமன் ரெட்டியார், திண்டிவனம் திரு.கார்த்தி ரெட்டி, சாத்தூர் திரு.பாலமுருகன் ரெட்டி, வட சென்னை மாவட்டத் தலைவர் திரு.M.கிருஷ்ணசாமி ரெட்டி, செயலாளர் திரு.M.P.சோலையப்பன், பொருளாளர் துர்கா திரு.P.செல்வராஜ் மற்றும் மத்திய சென்னை மாவட்ட ரெட்டி நல சங்கத்தின் தலைவர் திரு.S.வேல்முருகன்ரெட்டி, செயலாளர் வழக்கறிஞர் திரு.S.சுப்புராஜ் ரெட்டி, பொருளாளர் திரு.S.K.மாறன்ரெட்டி, துணைத்தலைவர் திரு.K.R.ரவி செல்வம், வேலூர் தொழிலதிபர் திரு.P.கேசவன், திரு.இராகவன் பெருமாள், திரு.கார்த்திக் ரெட்டி மற்றும் சமுதாய உறவுகள், சொந்தங்கள் அனைவரும் கலந்துக் கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

விழாவில் கோவில்பட்டி K.R.கல்வி குழுமங்களின் தலைவரும், நிர்வாக அறங்காவலரும் திருப்பணி செம்மல் திரு.K.R.அருணாச்சலம் ரெட்டியார் அவர்களால் அயோத்தி ரெட்டி குடும்ப மலர்-2024 வெளியிடப்பட்டது. அதுசமயம் அயோத்தி ரெட்டி இனப்பெரியவர்கள், தாய்மார்கள் என பல்லாயிரக்கணக்கான ரெட்டி இன உறவுகள் கலந்து கொண்டனர்.

**சிறப்புக்குரிய கூவலப்புரம்**

மதுரை மாவட்டம் பேரையூர் தாலுகா டி.கல்லுப்பட்டி பஞ்சாயத்து யூனியன் மேற்கு தொடர்ச்சி மலை சதுரகிரி அடிவாரத்தில் கூவலப்புரம் உள்ளது.

எல்லா ஊர்களிலும் ஒரு கோயில் தான் இருக்கும். ஆனால் கூவலப்புரம் கோயில்கள் நிறைந்த ஒரு சிறிய அழகிய கிராமம். இங்கு அனைவரும் விவசாய குடும்பத்தை சேர்ந்தவர்கள். இங்கு மொத்த மக்கள் தொகை 500 நபர்கள் இருப்பார்கள். கூவலப்புரத்திலிருந்து மதுரை 40 கி.மீ. இராசபாளையம் 30 கி.மீ. பேரையூர் 8.கி.மீ. டி.கல்லுப்பட்டி 16 கி.மீ தூரத்தில் உள்ளன.

தொடக்கத்தில் பஸ் வசதி கிடையாது. நடந்து சென்றும், சைக்கிளில் சென்றும் தான் பிள்ளைகள் படிக்கவேண்டும். இங்கு ஆரம்ப பாடசாலை 1 முதல் 8 வகுப்பு வரை உண்டு. அதற்கு மேல் படிக்க பேரையூர் அல்லது டி.கல்லுப்பட்டி போக வேண்டும்.

வெளியில் சென்று ஊருக்குள் நுழைந்தவுடன் முதலில் தெப்பக்குளம் இருக்கும். அதில் கை, கால் அலம்பிக் கொண்டு தான் வீட்டுக் செல்வார்கள். அடுத்து சுந்தரமூர்த்திசுவாமி கோயில் மடம் இருக்கும். இந்த மடம் எந்த நூற்றாண்டை சேர்ந்த கோவில் என்று தெரியவில்லை. மிகவும் பழமையானது. முன்பு கூவலப்புரம் சாமியார் மடம் என்று கூறப்பட்டது. இப்போது விளாத்திகுளம் ரெட்டியார் ஜனசங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

கோவில் கொடிமரம் அன்னக்கொடி கட்டியிருக்கும். ஆடி மாத அமாவாசைக்கு மூன்று நாள் அன்னதானம் நடைபெறும். மற்ற நாட்களில் வழிப்போக்கர்களுக்கு சாப்பாடு வழங்கப்படும். இன்றும் இந்த அன்னதானம் நடந்து கொண்டு தான் இருக்கிறது. மேலும் ஆடி அமாவாசைக்கு சதுரகிரி மகாலிங்கம் கோவிலுக்கு போவோர்





இங்கு வந்து சுந்தரமூர்த்தி சுவாமியை தரிசித்து செல்ல வேண்டும் என்று ஒரு ஐதீகம் பெரியவர்கள் சொல்லக் கேள்வி.

ஊருக்கு மேற்கே கருப்பசாமி கோவில் உள்ளது அதை கோவில் தோப்பு என்று சொல்வார்கள். அங்கு பஞ்ச பாண்டவர் வனவாசம் செய்யும் போது இங்கு தங்கி சென்றார்கள் என்று ஐதீகம். இங்கு பஞ்ச பாண்டவர் கோவில் உள்ளது. கண்மாயின் உள்ளே அண்ணாமலை ஈஸ்வரன் கோயில் உள்ளது. அதன் கரையில் முனீஸ்வரன் கோயில் உள்ளது. கண்மாயில் தண்ணீர் இருந்தால் தான் விவசாயம் நன்றாக நடக்கும். அனைவரும் விவசாயக் குடும்பம் தான். இப்பொழுது பல துறைகளில் இருக்கிறார்கள்.

இந்த நிகழ்வில் உறுதுணையாக செயலாற்றிய ரெட்டி உறவுகள், ரெட்டி ஜன சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள், செயலாளர், பொருளாளர், துணைத்தலைவர், துணைச்செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரின் உழைப்பிற்கும் தலை வணங்கி நன்றி தெரிவிக்கிறேன் என விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத் தலைவர் திரு.P.ராமகிருஷ்ணன் நன்றி தெரிவித்தார்.

## கே.ஆர்.டி.கேரியர் அகாடமி மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் வெற்றி, பாராட்டுகள்



சென்னையில் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நடத்தும் கே.ஆர்.டி.கேரியர் அகாடமியில் பயின்ற தென்காசியை சேர்ந்த மாணவர் திரு.T.ராஜராஜன் அவர்கள் TNPSC Group I தேர்வில் வெற்றிப் பெற்று காவல்துறையில் துணை காவல் கண்காணிப்பாளராக (DSP) பணி ஆணை பெற்றார். இதனை தமிழக அரசின் உள்துறை செயலாளர் திருமதி.P.அமுதா ஐஏஎஸ் அவர்களிடம் நேரில் பெற்றார்.

இவருடன் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட நம் கே.ஆர்.டி. கேரியர் அகாடமி மாணவி செல்வி.G.ஹேமாம்பிகா துணை ஆட்சியர் (DC) வாய்ப்பை இழந்த போதிலும், Group II தேர்வில் பணி ஆணை பெற்றுள்ளார். வாழ்த்துகள்.



கே.ஆர்.டி.கேரியர் அகாடமியில் பயின்ற திருக்கோவிலூரில் பிறந்து தற்போது சென்னை, சிட்லபாக்கத்தில் வசித்து வரும் எளிய ரெட்டி இன மாணவர் திரு.R.புவியரசு அவர்கள் TNPSC Group II தேர்வில் வெற்றிப்பெற்று வணிக வரித்துறையில் உதவியாளராக பணி ஆணை பெற்றுள்ளார். இம்மாணவர் அகாடமி தொடங்கப்பட்ட நாளிலிருந்து பயின்று TNPSC Group II முதல்நிலைத் தேர்வு, முதன்மை தேர்வில் வெற்றி பெற்றவர்.

இவருடன் மேலும் 12 மாணவ, மாணவிகள் நமது அகாடமியில் பயின்று பணி ஆணை பெற்றுள்ளார்கள். இவர் மேலும் பல பதவிகளை பெற்று நம் சமுதாய இளைஞர்களுக்கு வழிகாட்டியாக திகழ வாழ்த்துகள்.

# வயலூர் ரோடு ரெட்டி நலச் சங்க ஆலோசனைக் கூட்டம்



07.07.2024 அன்று மாலை வயலூர் ரோடு ரெட்டி நல சங்க மாதாந்திரக் கூட்டம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சங்கத்தலைவர் திரு.P.ஜனார்த்தனம், செயலாளர் திரு.C.ராஜேந்திரன், பொருளாளர் திரு.P.புனிதன், நிர்வாகிகள் திரு.R.துரைராஜ், திரு.R.ராஜகோபாலன், திரு.S.ஜெயக்குமார், திரு.S.மனோகரன், திரு.K.ரமேஷ், திரு.R.பிரசன்னவெங்கடாஜலம், திரு.T.V.S.இளங்கோவன், திரு.M.சீனிவாசகம், திரு.R.மனோகரன், திரு.V.முரளி, திரு.S.அழகர்சாமி, திரு.S.மணிவாசகம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வயலூர் ரோடு ரெட்டி நல சங்க செயலாளர் திரு.C.ராஜேந்திரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து சங்கத் தலைவர் திரு.P.ஜனார்த்தனம் அவர்கள் பேசும் போது, “நம் சங்க உறுப்பினர் திரு.C.V.விஜயன்–திருமதி.நர்மதா தம்பதியரின் மகன் V.கணேஷ் நடந்து முடிந்த 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் சோமரசன்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று கணிதம், சமூக அறிவியல் ஆகிய பாடங்களில் 100 மதிப்பெண்களும், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் 99 மதிப்பெண்களும் அறிவியல் பாடத்தில் 98 மதிப்பெண்களும் மொத்தம் 496 மதிப்பெண்கள் எடுத்து அரசு பள்ளி அளவில் மாநிலத்தில் இரண்டாம் இடமும், திருச்சி மாவட்ட அளவில் முதலிடமும் பிடித்து சாதனை படைத்துள்ள இவர் பிறந்த குடும்பத்திற்கும், சங்கத்திற்கும், நம் ரெட்டியார் சமூகத்திற்கும் பெருமை சேர்த்திருக்கிறார். அவருக்கு நம் சங்கத்தின் சார்பில் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாணவருக்கு கல்வி ஊக்கத்தொகையுடன், வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினராக வெற்றிப்பெற்றுள்ள மாண்புமிகு அமைச்சர் கே.என்.நேரு அவர்களின் தனயன் திரு.K.N.அருண்நேரு M.P. அவர்களுக்கு பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் சங்கத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்” என்றார்.


**தீர்மானம் 1 :** நடந்துமுடிந்த பாராளுமன்ற தேர்தலில் பெரம்பலூர் தொகுதியில் வெற்றி பெற்ற திரு.K.N.அருண்நேரு M.P. அவர்களுக்கு பாராட்டுகளும் வாழ்த்துகளும் தெரிவிக்கப் பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 2 :** அலுவலகப் பணியாளர்களின் குழந்தைகள் கல்வி செலவிற்கு உதவியாக ஆண்டுதோறும் வழங்குவதுபோல் கல்வி உதவித்தொகை ரூ.5000/- வீதம் இருவருக்கு ரூ.10,000/- வழங்க ஒப்புதல் பெறப்பட்டு வழங்கப்பட்டது.

**தீர்மானம் 3 :** நடந்து முடிந்த பத்தாம் வகுப்பு அரசுப்பொது தேர்வில் 500க்கு 496 மதிப்பெண்கள் பெற்று மாவட்டத்தில் முதல் இடம் பிடித்த நமது சங்க உறுப்பினர் திரு.C.V.விஜயன் அவர்களின் மகன் திரு.V.கணேஷ் அவர்களைப்பாராட்டி சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. மேலும் ரூ.5000/–க்கு காசோலை வழங்கப்பட்டது.

**தீர்மானம் 4 :** ஜூன் மாத 2024 மாத வரவு செலவு கணக்கு பொருளாளர் திரு.P.புனிதன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

நிறைவாக வயலூர் ரோடு ரெட்டி நலச் சங்கப் பொருளாளர் திரு.P.புனிதன் அவர்கள் நன்றி தெரிவித்தார்.



GANESH V ( 3514917 )

| SUBJECT | | MARKS |
|---|---|---|
| TAMIL | | 099 |
| ENGLISH | | 099 |
| MATHS | | 100 |
| SCIENCE ( Theory + Practical ) | ( 073 + 025 ) | 098 |
| SOCIAL SCIENCE | | 100 |
| TOTAL | | 496 |
| RESULT | | P |
| OPTIONAL | | |

# மதுரை மாவட்ட வாடிப்பட்டி ரெட்டி நலச் சங்கம்



மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அருகே, வடுகபட்டியில் ரெட்டி நல சங்கத் தலைவர் திரு.S.ராஜாபூர்ணசந்திரன் அவர்களின் 46-வது பிறந்தநாளையொட்டி, ஏழை, எளியவருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா 08.07.2024 அன்று நடைபெற்றது.

இந்த விழாவில், மாவட்டச் செயலாளர் மோனிகா திரு.S.சதீஷ் தலைமை தாங்கினார். பொருளாளர் திரு.ரவிச்சந்திரன், மாவட்ட நிர்வாகி வக்கீல் திரு.மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இளைஞர் அணி ஒன்றியச் செயலாளர் திரு.கார்த்திக் வரவேற்றார். இந்த விழாவில், ஏழை எளியவருக்கு இலவச வேட்டி, சேலை, அரிசி, தையல் இயந்திரங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இதில், வாடிப்பட்டி சங்க நிர்வாகிகள் வக்கீல் திரு.செல்வகுமார், திரு.கோவிந்தராஜன், திரு.விஜயன், திரு.குணசேகரன், திரு.ஜெயசீலன், திரு.முரளிராமசாமி, திரு.பாப்பையன், திரு.லோகநாதன், திரு.முரளி, திரு.ரெங்கசாமி, திரு.மாயாதரன், திரு.நந்தகுமார், திரு.கிருஷ்ணன், இளைஞர் அணித்தலைவர் திரு.இளமதி மற்றும் குட்லாம்பட்டி, செமினிபட்டி, ராமையன்பட்டி, பூச்சம்பட்டி கிராமத்தைச்சேர்ந்த இளைஞர்கள், அனைத்து கட்சி நிர்வாகிகள், தொழிலதிபர்கள், பெண்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில், திரு.பாலாஜி நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சிக்கு முன்னதாக 07.07.2024 அன்று மதுரை மாவட்ட ரெட்டி நல சங்க நிர்வாகக் குழு கூட்டம் மாலை 5 மணிக்கு மதுரை திருநகர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலாளர் மோனிகா திரு.S.சதீஷ் அவர்கள் செய்திருந்தார். அதுசமயம் எதிர்கால செயல்பாடுகள் குறித்தும், மாவட்ட ரெட்டி நல சங்க வளர்ச்சிக் குறித்தும் நிர்வாக குழு உறுப்பினர்களுடன் ஆலோசிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட ரெட்டி நல சங்கத்தை சேர்ந்த ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருச்சி கொப்பம்பட்டி கோவிலில் நாயக்கர் கல்வெட்டு கண்டெடுப்பு



திருச்சி மாவட்டம் கொப்பம்பட்டி, சப்தரிஷி ஈஸ்வரர் கோவில், நாயக்கர் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டம், துறையூர் ஒன்றியத்தில் உள்ள கொப்பம்பட்டியில் பழமையான சப்தரிஷி ஈஸ்வரர்–குங்குமவல்லி அம்மன் கோவில் உள்ளது.

இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான கோவிலில் உள்ள கல்வெட்டுகளை, சுவடி திட்டப்பணி பொறுப்பாளரும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன சுவடியியல் துறை பேராசிரியர் தாமரை பாண்டியன் தலைமையில் ஆய்வாளர்கள் ஆய்வு செய்து பதிவு செய்தனர். அதில் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாயக்கர் ஆட்சிகாலத்தில், இந்த கோவில் பூஜைக்கும், புனரமைப்புக்கும் நிலதானம் செய்தது தொடர்பான கல்வெட்டு, மூன்று இடங்களில் இருந்ததை கண்டறிந்தனர்.

இதுகுறித்து, தாமரைபாண்டியன் கூறியதாவது, இந்த கோவிலில் உள்ள சுவடிகளை சேகரித்து பதிப்பிக்கும் பணிக்காக ஆய்வு செய்தோம். அதில், 'கொப்பமாபுத் திருவூடல்' எனும், பழைய இலக்கிய சுவடி கிடைத்தது. அதை பதிப்பிக்க உள்ளோம்.

மேலும் கோவிலின் வரலாறு குறித்த தேடலுக்காக கோவிலின் சுற்றுச்சுவரை ஆய்வு செய்தபோது கருவறையின் வெளிப்புற வலப்பக்கத்தின் கீழ்ப்பகுதியில் ஒரு கல்வெட்டு இருந்தது. அதே கல்வெட்டு செய்தியை கோவில் வாயிலின் தெற்கு பகுதி தளிகை ஆற்றின் கிழக்குப் பகுதிகளிலும், கல்வெட்டாக இருந்ததை கண்டறிந்தோம்.

**நில தானம் :** விஜயநகர பேரரசின் மதுரை ஆட்சிப் பகுதியின் மனுகுண்டி நகரில் வாழ்ந்த வேமரெட்டி வம்சத்தினர், திருச்சியின் துறையூர் பகுதியில் ஜமீன்தாரராக குடியேறி, 'விஜய வெங்கிடாசலபதி' என பட்டம் சூட்டிக் கொண்டு, அப்பகுதியின் நிர்வாகத்தில் ஈடுபட்டனர்.

அந்தப் பரம்பரையில் வல்லக்கோல் எர்ரம ரெட்டியாரின் மகன் நல்லப்ப ரெட்டியார் என்பவர் பாழடைந்திருந்த இந்த கோவிலையும், இன்னும் சில கோவில்களையும் புதுப்பித்து, பூஜைக்காக நிலதானத்தையும் வழங்கினார்.

துறையூர் சிவை, மூலைபத்து கொப்புமாபுரி சப்தரிஷி ஈஸ்வரர் கோவிலின் புனரமைப்பு மற்றும் நைவேத்தியம் செய்வதற்காக, 1718ல் வைகாசி மாதம் 13ம் தேதி, எர்ரம ரெட்டியின் மகனும், வல்லக்கோல் நல்லப்ப ரெட்டியின் பேரனுமான நல்லப்ப ரெட்டி நிலதானம் செய்துள்ளார்.

**தானம் செய்யப்பட்ட நிலம் :** காரப்புடையாம் பட்டி எல்லைக்கு வடக்கு, தளிகை ஆற்றுக்கு கிழக்கு, நாகயநெல்லூர் தலைக்கு தெற்கு, தம்மம்பட்டி வகைக்கு மேற்கு எல்லைகளுக்கு உட்பட்ட மரங்கள், கால்நடை அடைக்கும்பட்டி, தென்னந்தோப்பு, புளியந்தோப்பு, கிராமத்தின் வரிவருவாய் ஆகியவை, இனி சப்தரிஷி ஈஸ்வரர் கோவிலுக்கு சொந்தம்.

அத்துடன் அங்குள்ள ஆறு, தென்னந்தோப்புக்கு கிழக்கில் உள்ள 6 சென்ட் நஞ்செய் நிலமும் தானமாக, எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

**நன்றி : தினமலர் 4.7.2024**

# உடல் நலம் காக்கும் உணவுகள்




பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் நல்ல சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டால் தான், அவர்கள் படிப்பில் நன்றாகக் கவனம் செலுத்த முடியும். படித்த பாடங்களை நினைவில் வைத்திருக்க முடியும். விளையாட்டு, உடற்பயிற்சி முதலியவற்றில் உற்சாகமாக ஈடுபட முடியும்.

ஆனால், நடைமுறையில் இந்தியா முதலிய வளரும் நாடுகளில், கிராமப்புறங்களில், பெரும்பாலான குழந்தைகள் போதுமான உணவை சாப்பிடுவதில்லை என்பதுதான் உண்மை. இதற்கு முக்கியக்காரணம், வறுமை, அடுத்த காரணம், உணவு பற்றி அறிவு குறைவு.

இதற்கு நேர் எதிர், நகர்ப்புறக் குழந்தைகள். இவர்களின் பெற்றோர், தங்கள் குழந்தைகள் புஷ்டியாக வளர வேண்டும் என்ற ஆசையில் பீட்ஸா, பர்கர், சீஸ் முதலிய கொழுப்பு மிகுந்த உணவுகளைக் கொடுத்து விடுகிறார்கள். அதிலும் பெற்றோர் இருவரும் வேலைக்குப் போகும் வீடுகளில், பெற்றோர்களுக்கு முன்பாகவே குழந்தை பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்து விடுகிறது. குழந்தை வீட்டுக்கு வரும்போது, நாம் இருக்கமுடியவில்லையே என்ற குற்ற உணர்வில், குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுகிற சிப்ஸ், கிரீம், கேக், கிரீம் பிஸ்கட், சாக்லேட் என்று அதிக கலோரி உள்ள நொறுக்குத் தின்பண்டங்களை வாங்கி வைத்துவிடுகிறார்கள். குழந்தை பள்ளியிலிருந்து வந்தவுடன், தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு, நொறுக்குத் தீனிகளைக் காலி செய்துவிடுகிறது. விளைவு, உடற்பருமன் அல்லது வயதுக்கு மீறிய வளர்ச்சி.

இந்த இரண்டுமே ஆபத்துதான். குழந்தைகளுக்குத் தேவை, சரிவிகித உணவு, கார்போஹைட்ரேட், புரதம், கொழுப்பு, வைட்டமின்கள், தாதுச்சத்துகள் என்று எல்லாச் சத்துகளும் முறைப்படி சரியான விகிதத்தில் இருக்க வேண்டும். குழந்தைகள் விரும்புகின்றன என்பதற்காக ஆரோக்கியத்தைக் கெடுக்கிற உணவுகளைத் தரக்கூடாது இது முக்கியம்.

**பொதுவான உணவுகள்**

அரசாங்கத்தின் 'பள்ளி சுகாதார அமைப்பு' பள்ளிக்குச் செல்கின்ற குழந்தைகளுக்கு எந்த உணவு, எந்த அளவில் இடம் பெறவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. அதன்படி அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு முதலிய தானிய உணவுகள் தினமும் 75 கிராம்; பால், பருப்பு, முட்டை, இறைச்சி முதலியவற்றிலிருந்து கிடைக்கும் புரத உணவு 30 கிராம்; தயிர், வெண்ணெய் முதலிய கொழுப்பு உணவுகள் 8 கிராம்; பச்சைக்கீரை வகைகள் 30 கிராம்,மற்ற காய்கறிகள் 30 கிராம் இடம்பெற வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை**

இப்போதெல்லாம் மிகக் குறைந்த வயதிலேயே குழந்தைகள் பள்ளிக்குச் செல்லத் தொடங்கிவிடுகிறார்கள். புதுஇடம், புதிய சூழல் முதலியவற்றால் குழந்தைகள் சரியாகச் சாப்பிடுவதில்லை. ஆகவே குறிப்பிட்ட நேரத்துக்குள் சாப்பிட்டு முடிக்க, வீட்டிலேயே குழந்தையைப் பழக்கப்படுத்த வேண்டியது பெற்றோர் கடமை.

அடுத்து, தினசரி ஒரே மாதிரி உணவைக் கொடுத்தனுப்பக் கூடாது. விதவிதமாக உணவுகளைச்சாப்பிடுவதில்தான் குழந்தைகளுக்கு ஆர்வம் அதிகம். அதிலும், பெரியவர்களுக்குத் தயாரிக்கும் அளவுகளில் இல்லாமல், மினி இட்லி, குட்டி குட்டி தோசை, முக்கோண வடிவில் சாண்ட்விச் என்று வித்தியாசமாகச் செய்து கொடுக்கலாம்.

# நேரடி தெய்வ வழித் தியானம்



- என்னை உருவாக்கி இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்திய ஒப்புயர்வற்ற என் இனிய தாயே! என் கண்ணுக்கு நேரடியாக காட்சி தரும் தெய்வமே!
- உன்னை வணங்கி இன்றைய என் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குகிறேன்.
- நான் இந்த உலகத்திற்கு வருவதற்கு மூலாதாரமாக இருந்த என் தந்தையின் சிறிய உயிரணுவை மடிதாங்கி,
- பத்து மாதம் சுமந்து எண்ணற்ற தியாகங்களைப் புரிந்து என்னை இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்தினாய்.
- அதன்வழி என் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் என வாழையடி வாழையாக உன் அருளால் நல்லவிதமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
- அதற்குக் காரணமாக உன்னையும் தந்தையையும் ஒருசேர வணங்குவதுடன் அவ்வாறே உனக்கு முன்னோர்களானவர்களையும் வணங்கி
- நானும் எனது குடும்பத்தினரும் என்றும் கல்விச்செல்வம், பொருட்செல்வம் அருட்செல்வம் ஆகியவற்றைப் பெற்றுச் சிறப்போடு வாழ உன் திருப்பாதங்களை வணங்கி வேண்டிக்கொள்கிறேன்
- நான் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த பிழைகளை பொறுத்தருள வேண்டிக் கொள்கிறேன்.

**குறிப்பு :** இதை ஒவ்வொரு நாளும் காலை, இரவு இருவேளை தியானம் செய்தால் மனித வாழ்வு மேம்மையடையும், இதைச் செய்து பார்த்து அனுபவித்துப் பயனடையுங்கள்.

தொகுத்தவர் : K.ரெங்கராஜன், சென்னை.

# திருமணம் வெறும் மணமா? இணைந்த மணமா?



இயற்கையாய் அமைந்தது ஆண்/பெண் மாறுபாடு. ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் துணை நின்று வாழ வேண்டும் என்பது முழுமையான வாழ்வின் கட்டாயம்.

ஆண், பெண் மாறுபாடு அவசியமான நிலையில், மனித மாண்பிற்கு ஏற்ற மண உரை ஒன்று தேவைப்படுகிறது. திருமணத்திற்கு மணமக்கள் தேர்வு செய்யப்படுவதிலே சரியான முறை யினை பின்பற்றப்பட வேண்டும்.

**உடல் பொருத்தம்**

மணப்பெண்ணுக்கும், ஆணுக்கும் உடல் அடிப்படையில் பொருத்தம் சரியாக இருக்கும்படி தேர்வு செய்யவேண்டும். அவர்களே தேர்வு செய்து கொண்டாலும் பெற் றோர்கள் தேர்வு செய்தாலும் அவர்கள் இதை அவசியம் கருத்தில் கொள்ளவேண்டும்.

**வயதுப் பொருத்தம்**

பெண்ணுக்கு 23–ம், ஆணுக்கு 25-ம் திருமணத்திற்கு ஏற்ற வயது. முடிந்த மட்டும் இந்த வயது வரம்பில் மணம் முடித்தல் நன்று. இதில் உடல் மற்றும் உளவியல் அடிப்படை யிலான பல நன்மைகள் உண்டு.

**கல்விப் பொருத்தம்**

முடிந்த மட்டும் கல்வித் தகுதி இருவருக்கும் இணையாக இருப்பது சிறப்பானது.

**கொள்கைப் பொருத்தம்**

இயன்றளவில் கணவன், மனைவியாக வாழ வேண்டியவர்களின் நோக்கு போக்கு, விருப்பு வெறுப்பு போன்றவை ஒத்துவர கூடியதாக தேர்வு செய்யப்படுதல் வேண்டும்.

**குணப் பொருத்தம்**

அதிகம் கோபம் உள்ளவருக்கு பொறுமை மிகுந்த வாழ்க்கை துணையைத் தேர்வு செய்வது நல்லது. கட்டுப்பாடான வாழ்க்கை உடைய–வருக்கு காலித்தனமான துணையைச் சேர்க்கக் கூடாது.

**தெரிந்து தேர்ந்து திருமணம்**

பெற்றோர் நிச்சயிக்கும் திருமணமாக இருப்பினும் பெண்ணும் ஆணும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள தேர்வு செய்ய போதிய வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்கள் இருவரின் சம்மதம் இல்லையென்றால் திருமணம் செய்யவேகூடாது. காரணம் வாழ வேண்டியவர்கள் அவர்கள் தான்.

**ஜோதிடம் பார்த்தல்**

ஆண், பெண் இருவரின் திருமண வாழ்க்கை பல்லியும், ஓடமம், பறவையும் பூவும் நிர்ணயிக்கின்றன. இது எத்தனை பிற் போக்குதனம்! இந்த மூடத்தனங்களால் நல்ல இணைப் பிரிக்கப்படுவதும் உண்டு. பொருத்தமற்றவர்கள் இணைக்கப் படுவதும் உண்டு. செவ்வாய் தோஷம், கேட்டை போன்ற பல்வேறு மூடத் தனங்களால் பலரின் வாழ்வு பாழடிக்கப்படுகிறது. சிலருக்கு இதனால் திருமணமே ஆகாமல் போய் விடுகிறது.

நூறு வயது என்று மாப்பிள்ளை ஜாதகத்தில் உள்ளது அவன் செவ்வாய் தோசத்துப் பெண்ணை மணந்தால் அவனுக்கு எப்படி கேடு வரும்? அவனுக்குத்தான் நூறு வயதாயிற்றே.

செவ்வாய் தோசத்திற்கு செவ்வாய் தோசம் பெண் ஏன் தேட வேண்டும்?

**வரதட்சணை வாங்கக் கூடாது**

தமிழரிடையே வரதட்சணை வாங்கும் பழக்கம் அக்காலத்தில் இருந்ததில்லை. பெண்ணுக்கு பொன் கொடுத்து அழைத்து செல்லும் முறைதான் அக்கால வழக்கு. அதுகூடப் பிற்காலத்தில் தான் ஏற்பட்டது.

ஆனால் வேரின கலாச்சாரத்தொடர்பால் மாப்பிள்ளைக்கு பவுன் கொடுக்கும் வழக்கம் வந்துவிட்டது. இதனால் பல பெண்களின் வாழ்வு பாழடிக்கப்படுவதோடு வாழ்நாள் முழுவதும் நிம்மதி இன்றியே கழிகிறது. பெண்கள் வரதட்சணை கேட்பவனை மணப்பதில்லை என்று உறுதிகொள்ள வேண்டும். மாப்பிள்ளையும் தன்மானத்தோடு வாழ விரும்பவேண்டும். பெற்றவர்களும் இதில் பிடிவாதமாய் இருந்து பிள்ளையின் வாழ்வை கெடுக்காமல் பெருந்தன்மையோடு நடந்து கொள்ளவேண்டும்.

**நெருங்கிய உறவில் திருமணம் கூடாது**

நெருங்கிய ரத்த உறவில் திருமணம் செய்தல் மருத்துவ ரீதியாகத் தவறு. அவ்வாறு திருமணம் செய்து கொள்ளுகின்றவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் உடல்நலத்தோடும் மூளை பலத்தோடும் பெரும்பாலும் இருப்பதில்லை. இது மெய்ப்பிக்கப்பட்ட உண்மை.

**திருமணப் பேச்சு**


பேசுவது போலவே வாழ்ந்து காட்டும் சான்றோர்களையும் சமுதாயத் தொண்டர் களையும் திருமணத்திற்கு தலைமை தாங்கவும், அறிவுரை வழங்கவும் செய்தல் வேண்டும்.

**மொய் வைத்தல்**

திருமணத்தின்போது 'மொய்' வைத்தல் என்பது மரபு உயர்நோக்கோடு அக்காலத்தில் ஏற் படுத்தப்பட்ட இவ்வழக்கம் இன்று அன்பளிப்பு என்ற பெயரில் கையூட்டு தரும் கருவியாக இன்று வளர்ந்துவிட்டது.

**எல்லாம் தெரியும் என்பவர்களை விட என்னால் முடியும் என்று முயற்சிப்பவரே வாழ்வில் ஜெயிக்கின்றார்...**

# ரத்தன் டாடாவின் அற்புத அறிவுரை



* இரும்பை வேறு எந்த பொருளாலும் அழித்துவிட முடியாது. இரும்பு அழிய வேண்டுமென்றால் துருப்பிடித்து அதுவாகவே அழிந்தால்தான் உண்டு. இதேதான் நமக்கும்.

* நம் சிந்தனை சிதைந்து நாமாகவே அழிந்தால்தான் உண்டு. நாம் உறுதியாக நின்று விட்டால் எப்பேர்பட்டவனாலும் நம்மை அழித்துவிட முடியாது. எவ்வளவு பெரிய சோதனையாலும் நம்மை வீழ்த்திவிட முடியாது.

* நாம் முடங்குவதாகவும், தோற்பதாகவும் உருவாகிற தோற்றங்கள் எல்லாம் தற்காலிக மானவை. எந்த தோல்வியும் நிலையானது இல்லை.

* எந்த வெற்றியும் நிரந்தரமானது இல்லை. என்றைக்கு வேண்டுமானால் எதிரியின் கை ஓங்கி இருக்கலாம்.

* நம் துக்கத்தின் அளவு உயர்ந்து இருக்கலாம். அது நிரந்தரமாக நிலைப்பது இல்லை. அது வலிமையான துக்கமில்லை. துக்கத்தின் சுவடு நிச்சயமாகக் கரையும்.

* எப்பொழுதெல்லாம் மனம் சோர்வு அடைகிறதோ அப்பொழுதெல்லாம் இத்தகைய மனிதர்களை நினைத்துக் கொள்ளலாம்..

* காய்ச்சல் வந்துவிட்டது, உடலில் சர்க்கரை அதிகரித்து விட்டது; ப்ரஷர் ஏறிவிட்டது என்று முடங்கிக் கொள்வதற்கும் சிறகுகளைச் சுருக்கிக் கொள்வதற்கும் ஆயிரம் காரணங்களை தேடுகிறவர்களுக்கு இவரைப்போன்றவர்கள் தான் டானிக் பாட்டில்கள்.

* என்னதான் ஆகிவிடும்..? ஒரு கை பார்த்து விடலாம். இங்கு யாருக்குத்தான் பிரச்சினை யில்லை? எறும்பிலிருந்து யானை வரைக்கும் அத்தனை உயிரினங்களுக்கும் பிரச்சனைகள் தான்.

* மனிதர்கள்தான் எல்லாவற்றையும் மண்டையில் ஏற்றி நாளை எப்படிச்சமாளிப்பது..? நாளை மறுநாள் எப்படிச்சமாளிப்பது..? அடுத்த ஆண்டு என்ன செய்வது என்று ஆயிரத்தெட்டுக் குழப்பங்களில் சிக்கிச்சின்னாபின்னமாகிறோம். எல்லாவற்றையும் சற்றே ஒதுக்கி வைத்துப் பார்ப்போம். இன்றைய கணத்தை வாழ்ந்து பார்க்கலாம்.

* இன்றைய தினத்தில் செய்ய வேண்டிய வேலை–களைச் செய்யலாம்.

* நாளை நடப்பதை நாளை பார்த்துக் கொள்ளலாம்.

* செத்துப்போவது பெரிய காரியமே இல்லை. ஒன்றரை நிமிட வேலைதான். அதோடு எல்லாம் முடிந்தது.

* ஆனால் இனி எந்தக் காலத்திலும் இந்த பூமியில் வாழ்வதற்கான வாய்ப்பே கிடைக்கப் போவதில்லை. அவ்வளவு சீக்கிரமாக முடித்துக் கொள்வதற்காக இவ்வளவு சிரமப்பட்டோம்?

* நம் அத்தனை சுமைகளையும் துன்பங்களையும் தூக்கி நம்மைச் சார்ந்தவர்களிடம் கொடுத்து விட்டுப் போவதுதான் நம் பிறப்பின் அர்த்தமா?

* ஓர் எறும்பைப் பிடித்துத் தண்ணீரில் போட்டால் அது கடைசி மூச்சு வரைக்கும் போராடிப் பார்த்து விட்டுத்தான் சாகிறது. ஒரு மீனைத்தூக்கி தரையில் வீசினால் அதுவும் கடைசி மூச்சு வரைக்கும் தம் கட்டி பார்த்து விடுகிறது.

* மனிதர்கள் நமக்கு என்ன? நாம் மட்டும் ஏன் இடையிலேயே மூச்சை நிறுத்திக்கொள்ள வேண்டும்?

* நம்மிடம் உயிர் இருக்கிறதா..? தெளிவான சிந்தனை இருக்கிறதா? அது போதும். எல்லாவற்றையும் சமாளித்துவிடலாம். யார் எதிர்த்தாலும் மோதிப் பார்த்துவிடலாம்.

* நம்பிக்கைதான் வாழ்க்கை. கடைசி வரைக்கும் முயற்சித்துப்பார்த்துவிட்டேன் இனி வாய்ப்பில்லை என்று சொல்வதே கூட அவநம்பிக்கை தான்.

* அதை உடைத்து நொறுக்கினால் போதும். அந்தச் சுவருக்கு அப்பால் காத்திருக்கும் வெற்றி நமக்குத்தான்.

தொகுத்தவர் : S.காமராஜ், துறையூர்


ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

**ரெட்டி திருமணத் தகவல் மையம்**

எண் : 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083. 044 - 2485 3333, 9688877700,
E-mail Id : reddymatrimonired@gmail.com | For Online Registration Website : www.reddymatrimony.co.in
நிறைவான சேவைக்கு சரியான சாய்ஸ் இம்மையம்.
வேலை நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
(வார விடுமுறை கிடையாது)

# நாமக்கல் மாவட்ட எருமப்பட்டி ரெட்டி நலச் சங்க குடும்ப விழா



நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டியில் ஒன்றிய ரெட்டி நலச் சங்க குடும்ப விழா கூட்டம் 14.07.2024 ஞாயிறன்று நடைபெற்றது. தமிழ்நாடு ரெட்டி நல சங்கம் மாநிலப்பொதுச்செயலாளர் திரு.K.ஜனகராஜன் அவர்கள் மற்றும் மாநில சங்கத்தின் முன்னணி தலைவர் திரு.M.C.பழனிச் சாமி ரெட்டி அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

எருமப்பட்டி ஒன்றிய ரெட்டி நல சங்கத்தின் தலைவர் திரு.ஸ்ரீனிவாசன் ரெட்டியார் அவர்கள் தலைமையில் கௌரவத் தலைவர் எருமப்பட்டி ஜமீன்தார் திரு.வி.சேகரன் ரெட்டியார் அவர்கள் மற்றும் எருமப்பட்டி ஒன்றியத்தின் முன்னாள் சேர்மன் பட்டு என்கிற திரு.கே.பத்மநாபன் மற்றும் நாமக்கல் மாவட்ட தலைவர் திரு.பா.தயாளன் ரெட்டியார் அவர்கள் முன்னிலையில் குடும்ப விழா கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஒன்றிய தலைவர் திரு.சீனிவாசன் ரெட்டியார் அவர்கள் வரவேற்புரை நல்க, ஒன்றிய செயலாளர் திரு.கே.செல்வகுமார் அவர்கள் ஆண்டறிக்கை வாசிக்க, எருமப்பட்டி முன்னாள் சேர்மன் பட்டு என்கிற திரு.கே.பத்மநாபன் அவர்கள், நாமக்கல் முன்னாள் செயலாளர் திரு.கே.கண்ணன் மற்றும் நகர சங்கச் செயலாளர் திரு.இரா.அன்பழகன், பவித்திரம் ரெட்டி நல சங்க தலைவர் திரு.சந்திரசேகரன், எருமப்பட்டி முன்னாள் பேரூராட்சி தலைவர் திருமதி.நிர்மலா சிதம்பரம் மற்றும் ஒன்றிய இளைஞர் அணி தலைவர் ஜெயப்பிரகாஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிறனர்.

சிறப்புரையாக மாநில பொதுச் செயலாளர் திரு.கி.ஜனகராஜன் அவர்கள், மாநிலப் பொருளாளர் திரு.அஜந்தா கண்ணன் அவர்கள் மற்றும் முன்னணித் தலைவர் திரு.M.C.பழனிச்சாமி ரெட்டி அவர்கள் கல்வி குறித்தும், இடஒதுக்கீடு குறித்தும், தமிழ்நாடு ரெட்டி நல சங்கம் அனைத்து ரெட்டி இன மக்களுக்கும் பாதுகாப்பாக நல்வழிகாட்டியாக இருக்கும் என்று உறுதி கூறியும் விழாவை சிறக்க செய்தனர். திரு.யுவராஜா கோபாலசாமி அவர்களின் இனிய தொகுப்புரையோடு, எருமப்பட்டி ஒன்றிய பொருளாளர் திரு.பாஸ்கர் அவர்கள் நன்றிரை வழங்க, விழா இனிது நிறைவுற்றது.



**நிகழ்ச்சியின் சிறப்பு**



80 வயது நிரம்பிய தம்பதியர்கள் 28 ஜோடிகளுக்கு சதாபிஷேக நிகழ்வு நடைபெற்றது. அதுசமயம் ஐயர் அவர்களின் மந்திரங்களோடு மங்கள வாத்தியம் முழங்க சீர்வரிசை தட்டுடன் சிறப்பு மரியாதைகளுடன் கோவை திரு.M.C.பழனிச்சாமி அவர்கள் வழங்கினார். ஸ்ரீனிவாச கல்யாண சுவாமி படத்துடன் எழுந்து நின்ற தம்பதியர்களை மண்டபத்தில் உள்ள அனைவரும் எழுந்து நின்று வணங்கி ஆசி பெற்ற நிகழ்வு அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

10வது மற்றும் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற 20 நபர்களுக்கு ஊக்கப்பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

ஒன்றிய நிர்வாகிகள் அனைவரும் சிறப்பான முறையில் கௌரவிக்கப்பட்டார்கள். சுவையான சிறப்பான மதிய உணவினை நிர்வாகிகளே முன்னின்று பரிமாறி விருந்தினர்களை கௌரவிக்க மதியம் 2 மணிக்கு விழா நிறைவு பெற்றது. கூட்டத்தை மிகச் சிறப்பாக நடத்திய எருமப்பட்டி ஒன்றிய நிர்வாகிகள் அனைவரையும் தமிழ்நாடு ரெட்டி நல சங்கம் மனதார பாராட்டுகிறது.

# விவாதத்தில் வெல்ல உதவும் திறன்கள்

“பதிலுக்கு பதில் பேசிக்கிட்டே இருக்கிற, கொஞ்சம் பொறுமையா கேட்டுட்டு அப்புறமா பேசு”—இவ்வாறு இன்றைய பெரியவர்கள் சொல்வது காதில் விழுகிறது. 40, 50 ஆண்டுகளுக்கு முன்பு தாத்தா அப்பாவை திட்டும் போதும், அப்பா அம்மாவை திட்டும் போதும், அப்பா பிள்ளைகளை திட்டும் போதும் இளையோர்கள் மௌனமாக இருப்பார்கள். பதிலுக்கு பேசமாட்டார்கள். வீட்டில் இருக்கும் முதியவர்கள் தான் அப்போது மத்யஸ்தம் செய்வார்கள். திட்டு வாங்கியவர்கள் சிறிதுநேரம் கழித்தோ அல்லது அடுத்த நாளோ திட்டியதில் உள்ள அதிகத்தனத்தை எடுத்துக்காட்டி மற்றும் தம் கருத்தில் உள்ள நியாயத்தை எடுத்துச் சொல்வார்கள். பெரியவர்களும் ‘சரி சரி போ, ஏதோ பேசி விட்டேன், நீ சொல்வதும் சரிதான்’ என்பார்கள். இதுதான் அன்றைய ஒழுங்குமுறை.

அப்போது நமது வீடுகளில் கூட்டு குடும்ப வாழ்க்கை முறை இருந்தது. பெரியவர்கள் உட்காரும்போது மற்றவர்கள் அவர்களுக்கு கீழேயோ அல்லது சம உயரத்திலோ தான் அமருவார்கள். நிச்சயமாக பெரியவர்களுக்கு எதிரில் உயரமான இடத்தில் அமர மாட்டார்கள். படுக்கும்போதும் பெரியவர்கள் இருக்கும் திசை நோக்கி கால்கள் நீட்டி படுக்க மாட்டார்கள். இப்போது உள்ள அவசர உலகில் நாகரீகம் என்ற போர்வையில் எல்லாம் மாறிவிட்டது. எங்கும் தனிக்குடும்பம்,அதிலும் சம உரிமை என்கின்றனர். இவையெல்லாம் சரியா தவறா என்ற விவாதம் இங்கு வேண்டாம்.

நாம் சாதாரணமாக பேசும்போது அனைத்து நேரங்களிலும் வார்த்தைகளை மிகச்சரியாக அளந்து பேச முடியாது. அதில் ஏதேனும் ஓரிரு வார்த்தைகள் சற்று விலகி விழுந்தாலும், இன்றைய இளைஞர்கள் கேட்டு பொறுமை காக்கமாட்டார்கள். இளைஞர்கள் என்றால் ஆண் பெண் இருபாலரும் தான். இன்றைக்கு நன்கு காய்ந்த தீக்குச்சி போல் உள்ளனர். உராய்வு சற்று பட்டாலும் பொரி பறக்கிறது விவாதம். பெற்றோர்கள் ஆலோசனை அல்லது வழிகாட்டுதல்களைக்கூறினால் டென்ஷன் ஆகி விடுகின்றனர். நண்பர்களிடையே எந்த ஓட்டலில் சாப்பிடலாம் என்பது போன்ற சிறிய விஷயங்களிலும் பெரிய விவாதங்கள் நடைபெறுகின்றன. அலுவலகங்களில் உயர் அதிகாரிகள் வேலையில் திருத்தம் கூறினால் டென்ஷன் ஆகின்றனர். அதாவது மாறுபட்ட கருத்துகள் வரும்போது அவற்றை எவ்விதம் கையாளுவது என்பது தெரியவில்லை. இன்றைய இளைஞர்களின் நிலை இதுதான்.

தற்போது இளைஞர்கள் சமுதாயத்தில் நிறைய விஷயங்களை தெரிந்து வைத்துள்ளனர். ஒரு பிரச்சனையை ஒவ்வொருவரும் வெவ்வேறு கோணத்தில் அணுகி புரிந்து வைத்துள்ளனர். இதனை உணராமல் கருத்துகள் மாறுபடும்போது தனது கருத்துகள் தான் சரியானவை என அடம்பிடிக்கும் போது மற்றவர்களின் கருத்துக்களில் உள்ள உண்மைத்தன்மையை உணரும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. ஏனெனில் அடம் பிடிக்கும் மனம் பிறரது கருத்துகளை உள்வாங்க மறுக்கிறது. விளைவாக நம் வார்த்தைகளில் பிறர் கவனம் செலுத்துதலும் குறைகிறது. அறியாமை அதிகம் இருப்பின், அடம்பிடிப்பதும் அதிகமாகும் என்று ஓர் ஆய்வு கூறுகிறது. நம் கருத்துகளை பிறர் சுமூகமாக ஒத்துக் கொள்ள வைப்பதும், பிறர் கருத்துகளுக்கு உரிய மறுப்பு சொல்வதும் ஒரு கலை. இதற்கான திறன்களை பழக்கத்தின் மூலம் வளர்த்துக் கொள்ளலாம்.

ஒரு பிரச்சனையைப் பற்றி பேசும் போது நாம் முதலில் மற்றவர்கள் கூறும் கருத்துகளில் கவனம் செலுத்தி புரிந்து கொள்ள தயாராக வேண்டும். எப்போது மாறுபட்ட கருத்துகள் வந்த உடனே கேட்கவே மறுக்கிறோமோ அப்போதே நாம் அடம் பிடிக்கிறோம், அதாவது நாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்கிறோம் என்பது தெளிவு. அந்த சூழலில் நாம் உணராமலே பிறர் நைஸாக விலகிவிடுவர். ஆகவே முதலில் பிறர் சொல்வதைக் கேட்க வேண்டும். அப்படி கேட்பதால் அக்கருத்தினை ஏற்றுக்கொண்டோம் என்பது இல்லை. மாறாக நாம் செவி சாய்க்கிறோம் என்பதனை மாற்றார் உணர்வார்கள்.

‘தொடர்ந்து உங்கள் கருத்துப்படி’, ‘நீங்கள் நினைப்பது என்னவென்றால்’ என்ற வார்த்தைகளை நாம் கூறும்போது இவை விவாதத்தில் நமக்கு உதவிகரமாக அமையும். நாம் கவனிக்கிறோம் என்று அவர்கள் உணர துவங்குவார்கள். தொடர்ந்து நமது கருத்துகளைக் கேட்க முன்வருவார்கள். இத்தகைய அணுகுமுறையினால் இரு தரப்பிலும் புரிதலில் மேம்பாடு காணலாம். ஈகோ குறைந்து சரியான புரிதலில் தெளிவு ஏற்படும்.

நாம் நம் கருத்துகளை உறுதியாக முன் வைக்கும் போது குரலை உயர்த்துதல், நோஸ்கட் செய்தல், நையாண்டி, கிண்டல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

மற்றும் நமது body language, அதாவது அங்க அசைவுகளில் வேகமாக திரும்புதல், கண்களை சுழற்றுதல், கையை, தலையை வேகமாக ஆட்டுதல் போன்றவைகள் கூடாது.

மாறாக பண்புடனும், நிதானமாகவும், கண்களில் நேராக பார்த்தும் பேச வேண்டும்.

தனிப்பட்ட முறையில் ‘நீங்கள் எப்போதும் இப்படித்தான், ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள்’ என்பது போன்ற வசனங்கள் இருப்பின் அவை அவருக்கு சாதகமாகி அவர் தனது நிலைப்பாட்டில் உறுதியாகிவிடுவார்.

அடுத்து அவர் தனது கருத்தினை உடனே மாற்றிக்கொள்வார் என எதிர்பார்த்தல் கூடாது. ஆழ பதிந்திருக்கும் மாறுபட்ட கருத்துகளை அவர்

மனதிற்குள் அலசி ஆய்வு செய்து பார்க்க அவருக்கு சற்று கால அவகாசம் தேவைப்படும். மாறாக, நாம் நிதானம் இல்லாமல் தொடர்ந்து அழுத்தம் தருவோமானால், அவர் தம் கருத்திலிருந்து விலக தயங்கி அவர் கருத்திலேயே உறுதி பெறுவார். அமைதியான கால அவகாசம் அறிவு தெளிவு பெறுதலில் பெரும் பங்கு வைக்கிறது.

அடுத்து ஒருவரின் பேச்சில் நன்மை தீமை விளைவது அவருடைய சொல்வன்மையைப் பொறுத்தது. ஆதலால் சொல்லை விழிப்புடன் சொல்லுக என்று உரைக்கும் திருக்குறளை இங்கு காண்போம்.

ஆக்கமும் கேடும் அதனால் வருவதால்
காத்தோம்பல் சொல்லின் கண்சோர்வு

இங்கு சொல் வன்மை என்பது விவாதத்தில் நாம் பயன்படுத்தும் பொருத்தமான வார்த்தைகளின் தொகுப்பே ஆகும்.

இவ்விதம் மேற்காணும் விவாதத் திறன்களை வளர்த்து உரிய சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் விவாதத்தில் உண்மையை நிலை நாட்ட நாம் நம் கருத்தினை பிறர் ஏற்றுக்கொள்ள வைப்பதிலோ அல்லது பிறரின் தப்பான கருத்துகளை மறுப்பதிலோ நாம் வெற்றி பெறலாம்.

R. இராஜசேகரன், விழுப்புரம்.

## பயணத்தின்போது சிக்கனமாக இருக்க சிறந்த வழிகள்!

பயணத்திற்காகப் பலரும் பல்வேறு வழிகளில் பணத்தைச் சேமிப்பார்கள். ஆனால், பயணத்தின் போது பணத்தைச்சேமிப்பதில் கவனத்தை இழந்து விடுவார்கள். அப்படி பயணத்தின்போதும் சேமிக்க சில ஆலோசனைகள் இங்கே.. எப்போதும் 'ஆப் சீசனில்' பயணம் செய்வது, பல விதங்களில் பணத்தைச் சேமிக்க உதவும். குறுகிய கால பொது விடுமுறை உள்ள நாட்களை பயணத்துக்காக தேர்ந்தெடுத்தால், பயணத்துக்கான செலவு, தங்குமிடம், உணவு, நினைவுப் பொருட்கள் என அனைத்தும் மலிவாக கிடைக்கும்.

வருடத்தில் சில மாதங்கள் அல்லது சில நாட்களில் எந்த சீசனும் இருக்காது. அப்படிப்பட்ட நாட்களை தேர்வு செய்து பயணத்துக்கான டிக்கெட்டுகளை குறைந்த பட்சம் 30 நாட்களுக்கு முன்னரே முன்பதிவு செய்யுங்கள். குறைவான கட்டணத்தில் சிறந்த தள்ளுபடியுடன் டிக்கெட்டுகள் கிடைக்கும்.

நீண்ட தூரப் பயணத்தின்போது தொடர்ச்சியாக செல்லக்கூடிய ஒருவழி பயணத்தை தேர்ந்தெடுப்பது சலிப்பை ஏற்படுத்தினாலும், பயணத்துக்கான செலவை குறைக்கும்.

பயண காலத்துக்கு ஏற்றவாறு நாமே உணவு, தின்பண்டங்கள், தண்ணீர் ஆகியவற்றை எடுத்துச் செல்வது சேமிப்புடன் ஆரோக்கியத்துக்கும் நல்லது. அதேநேரம் உணவு மற்றும் தேவையான பொருட்களை கொண்டு செல்லத் தனிப்பைகளை பயன்படுத்துவதைத் தவிர்த்து, ஒரே ஒரு பையுடன் பயணத்தை மேற்கொள்வது சமான்களுக்கு ஏற்படும் செலவுகளைத் தவிர்க்க உதவும்.

பயணத்தின் போது தேவையின்றி வாங்கக் கூடிய பொருட்களின் மீதுள்ள நாட்டத்தை குறைத்துப் பணத்தை மிச்சப்படுத்தலாம்.

தேவைக்கேற்ப நாம் தங்கும் இடங்களை நாள் கணக்கில் பதிவு செய்வதை விட, மணிக்கணக்கில் முன்பதிவு செய்வது செலவைக் குறைக்க சிறந்த வழி.




பயண நேரத்தைத்தவிர மற்ற நேரங்களில் உணவுக்கான செலவைக் கட்டுப்படுத்த, நீங்கள் உண்ணும் உணவின் தன்மையை தெளிவாக முடிவு செய்யுங்கள். பயணத்தின்போது பொரித்த, எண்ணெய் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை வாங்குவதையும், சாப்பிடுவதையும் தவிர்க்கலாம். அவை அதிக செலவை ஏற்படுத்துவதுடன், ஆரோக்கியத்தையும் பாதிக்கும்.

பயணத்தின்போது நாம் பொதுவாக செய்யும் மற்றொரு தவறு, சுற்றுலா சென்ற இடத்தில் நாம் பயன்படுத்தும் வாகனங்கள். சுற்றுலாவின் போது நமக்கென தனியாக வாகனங்களை பயன்படுத்தாமல் பொதுபோக்குவரத்தை பயன்படுத்துவது வீண் செலவை குறைப்பதுடன், சுற்றுலா செல்வதன் அசல் உணர்வை உணரும் படியான புதிய அனுபவத்தை பெற உதவும்.

**எனக்கு பிரச்சினை என்று ஒரு போதும் சொல்லாதீர்கள் பிரச்சனை என்றால் பயமும் கவலையும் வந்து விடும் எனக்கு ஒரு சவால் என்று சொல்லி பாருங்கள் தைரியமும் தன்னம்பிக்கையும் தானாக வந்து விடும்...**

# மனதை திறப்போம் மாயையை அழிப்போம்

**ஆன்மீகப் பகுதி**



மனிதன் பூமியில் பிறப்பதே தனது பூர்வ ஜென்ம கர்மாவை தீர்த்துக் கொள்ளவே தவிர வேறு எந்த காரணமும் இல்லை என்று காஞ்சி பெரியவர் கூறுவதுண்டு.

காஞ்சி பெரியவரிடம் வெளிநாட்டு பெண்மணி ஒருவர் தனது சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளும் நோக்கில், "இந்து மதத்தில் மட்டும் மறுபிறவி, கர்மா என்று இருப்பதாக கூறப் படுகிறதே இதை எப்படி உண்மை என்று நம்ப முடியும்" என்ற வினாவை முன்வைத்தார்.

இதற்கு பதில் ஏதும் கூறாத பெரியவா, அந்தப் பெண்மணியிடம், "அருகில் உள்ள குழந்தைகள் பிறப்பு மருத்துவமனைக்கு சென்று ஒருநாள் தங்கியிருந்த பின்பு என்னிடம் வாருங்கள்" என்று கூறி ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.

அடுத்த நாள் மகானிடம் வந்த பெண்மணியிடம்... மருத்துவமனையில் நீங்கள் கண்ட காட்சி என்ன?" என்ற கேள்வியை கேட்டார் பெரியவர்.

"நேற்று பல குழந்தைகள் பிறந்தன. ஒன்று கருப்பு, மற்றொன்று வெள்ளை, ஒன்று ஏழைத் தம்பதிக்கும், மற்றொன்று ஆடம்பரமான பணக்கார தம்பதிக்கும், ஒன்று பசிக்காக அழும் சூழல், மற்றொன்று தங்கத்தொட்டிலில் தாலட்டப்படும் சூழல் – இப்படி பல்வேறு வகையான பிறப்புகளை நேற்று பார்த்தேன்" என்றார் அந்தப் பெண்மணி.

"இதுதான் பூர்வஜென்ம கர்மா..... கர்மா இல்லையென்றால் அனைத்து குழந்தைகளும் ஒரே மாதிரியாகத்தானே பூமியில் பிறந்திருக்க வேண்டும்...

முன்ஜென்மத்தில் விட்டுச்சென்ற கர்மாவை பூர்த்திசெய்ய இறைவனால் இந்த ஒரு ஜென்மம் கொடுக்கப்பட்டுள்ளது. சென்ற ஜென்மத்தில் செய்த கர்மாவின் விளைவால் தான் அந்தக் குழந்தைகள் ஏற்றத்தாழ்வுடன் பிறந்திருக்கின்றன.

இந்த ஜென்மத்தில் தனது கடமையை முழுவதும் நல்லபடியாக பூர்த்தி செய்ய இந்தப் பிறவியைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்காகத் தான் மறுபிறவி இறைவனால் கொடுக்கப் பட்டுள்ளது.

இந்து மதத்தில் கர்மாவும், மறு ஜென்மமும் ஒரு மனிதனை, மனித நிலையில் இருந்து வேறு நிலைக்கு எடுத்துச்செல்ல இறைவன் தரும் ஒரு வரம்" என்று கூறினார்.

மனிதப்பிறவி என்பதற்கும், தாம் அனுபவிக்கும் நன்மை தீமை என்பதற்கும் நாமே காரணமாக இருக்கிறோம் என்பதை அறிந்தால் போதும் இப்பிறவியை சிறப்பாக கடந்து விடலாம்.

வீணான ஆசை, மோகம், பாசம், பந்தம், பற்று போன்றவற்றிற்கு இந்த உடலை அடிமைப்படுத்தி மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து மேல்நிலை அடைய முடியாமல் தவிக்கும் அநேகருக்கு...

இந்த உடலில் இரண்டு வித சோர்வு வந்து விடும், அதில் ஒன்று உடல்சோர்வு, மற்றொன்று மனச்சோர்வு...

சத்தான உணவு, ஆரோக்கியமான வாழ்நிலையை அமைத்துக் கொண்டால் உடல் சோர்வு என்பது தானாக மறைந்துவிடும்.

ஆனால் மனச்சோர்வு என்பதை தீர்க்க சற்று சிரமப்பட்டால்தான் முடியும். இந்த மனச் சோர்வை தீர்க்கும் முயற்சியில் சற்று ஆழ்ந்து இறங்கினால் மனித வாழ்வின் கடமை என்ன என்பது புரிந்துவிடும்.

**மனச் சோர்வு என்பது என்ன?**

- ♦ எதைப்பார்த்தாலும் வெறுப்பாக இருக்கும்.
- ♦ யாரைப் பார்த்தாலும் எரிச்சல் வரும்.
- ♦ மனதுக்குள் தோற்றுவிட்டதுபோல் ஒரு வெறுமை உண்டாகும்.

அப்படியானால், மனச்சோர்வு என்ற எதிரியை உள்ளே அனுமதித்துவிட்டீர்கள் என்று அர்த்தம்.

**மனச்சோர்வு எதனால் வருகிறது?**

அடிப்படையில் உங்களுக்கு என்ன நிகழ்கிறது? நீங்கள் விரும்பியபடி யாரும் நடக்கவில்லை, எதிர்பார்த்தபடி எதுவும் நிகழவில்லை, ஆசைபட்டபடி வாழ்க்கையும் அமையவில்லை.

சுருக்கமாகச் சொன்னால், உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறதோ, அதை ஏற்றுக் கொள்ளமுடியாமல், நீங்கள் தவிக்கிறீர்கள், அதை எதிர்க்கிறீர்கள்.

நவீன விஞ்ஞானத்தில் இதற்கு தீர்வு காண கவுன்சிலிங் என்ற முறையை கையாளுகின்றனர். இந்த கவுன்சிலிங் முறையைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட தொகையை பெற்றுக்கொண்டு, புத்துணர்வு தரும் சில செயல்களை விளக்கிக்கூறி மனிதர்களின் மனோநிலையை சரி செய்துவிடுவதாக கூறுகின்றனர்.

ஆனாலும், அந்த ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மனம் சாந்தமடைந்தாலும், ஏதோ ஒரு காலத்தில்... ஏதோ ஒரு செயலில் மீண்டும் மனம் சோர்ந்து விடும்.

தற்காலத்தில் இதை மனச்சோர்வு என்று கூறினாலும், அக்காலத்தில் இதை வேறு வழிமுறையில் கையாண்டுள்ளனர் நமது முன்னோர்கள்.

இப்பிறவியின் மாயையை உணர்ந்த மனம் இந்த மாயையின் பிடியிலிருந்து தப்பிக்க நினைப்பதாகவே கருதினர்.

இவ்வாறு தப்பிக்க நினைத்தவர்கள்தான், பட்டினத்தார், அருணகிரிநாதர், ஔவையார், கண்ணப்பநாயனார் போன்ற எண்ணற்ற மகான்கள்.

விளக்கமாக சொல்லவேண்டுமானால் பொன், பொருள், ஆடம்பரம் என்று தனது மனதை அலையவிட்டுக் கொண்டிருந்த **பட்டினத்தாரின்** மனோநிலையை தெய்வீகத்தின் பக்கம் திருப்பி அவரை மனிதப் பிறவியிலிருந்து விடுவிக்க நினைத்த இறைவன், அவருக்கு மகனாக தோன்றி “காதறுந்த ஊசியும் வாராது காண்” என்ற ஒற்றை வார்த்தையின் மூலம், அவரிடமிருந்த பொன், மணி, ஆடம்பர வாழ்க்கை, ஆசாபாசம், சொந்தபந்தம் போன்ற சங்கிலியை விடுவித்து ஆண்டியாக, அய்யனை தேட வைத்து இப்பிறவியின் நோக்கத்தை நிறைவேற்ற உதவினார்.

குடும்பம், கணவன், பந்த பாசம் மட்டுமே வாழ்க்கை என்றிருந்த **ஔவையாருக்**கு இதற்கும் மேல் ஒன்று உள்ளது என்பதை இறைவன் காட்டிய பின்புதான், ஔவையார் தனது குடும்பம், சுகபோகவாழ்க்கை, அழகு போன்றவற்றை துறந்து மனித வாழ்க்கையை கடந்தார்.

உல்லாசம் மிகுந்த வாழ்க்கை மட்டுமே உலகம் அல்ல என்பதை உணர்ந்த **அருணகிரி நாதர்** உலகிற்கும் மேலான ஒருவனை நாடிய போது மிகப்பெரிய மகானாக மாறினார்.

முன்ஜென்ம கர்மாவின் தொடர்பால், கல்லாக காட்சியளித்த லிங்கத்தை மானசீகமாக ஏற்று உறவு பாவத்துடன் அக்கல்லை அணுகியபோது, அக்கல்லிற்குள் வீற்றிருந்த இறைவன் தன் கண்ணை இழந்து காட்சி அளித்ததை பொறுத்துக்கொள்ள முடியாத **கண்ணப்பன்,** தன் கண்ணையே தோண்டி அக்கல்லிற்கு பொருத்தினான், கல்லிற்குள்ளும் இறைவன் உள்ளான், என்பதை தனது அன்பின் வாயிலாக வெளிக்காட்டிய கண்ணப்ப நாயனாரை ஆட்கொண்டான் இறைவன்.

இவர்களைப்போன்று இக்காலத்தில் மனிதப் பிறவியைப்பற்றியும், அந்த பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றும் வழி முறையும் தெரியாமல் தவிக்கிறோம்.

அஞ்ஞானத்தால், விஞ்ஞானமே பெரியது என்ற போதையில் திரிகிறோம், சுகபோக வாழ்க்கை இருக்க, ஞானமார்க்கத்தை மறுக்கிறோம்.

இந்த நிலையிலிருந்து சிறிது மாறுபட்டு சிந்தித்தோமானால் இப்பிறவி பயன் என்ன என்பதை ஆன்மீகத்தால் எளிதாக தெரிந்து கொள்ளலாம். **இதற்கு நமக்கு கிடைத்த எளிய வழிமுறையே தியானம், யோகா.**

முடிந்த அளவிற்கு இந்த தியானத்தையும், யோகாவையும் தொடர்ந்து செய்யும் போது, அண்ட சராசரங்களைப் பற்றிய தெளிவு ஏற்பட அதிகப்படியான வாய்ப்பு உள்ளது.

தியானம் கணக்கிடலங்கா பயன்களை உங்களது உடல், மனம் மற்றும் ஆத்மாவிற்குத் தருகின்றது. ஆழ்ந்த தூக்கத்தில் கிடைக்கும் ஓய்வினை விட தியானத்தில் கிடைக்கும் ஓய்வு அதிகம். அதிக ஓய்வின் பயனாக அதிக அளவில் செயல்பட முடியும்.

தினமும் குறிப்பிட்டநேரத்தை தியானத்திற்கு செலவழிக்கும் போது, தியானத்தினால் உங்கள் விழிப்புணர்வு பரிணாம வளர்ச்சியடைந்து, காலப்போக்கில் உயர்ந்த சீரிய அனுபவங்களைப்பெற முடிகிறது. உங்கள் விழிப்புணர்வு பரிணாம வளர்ச்சியடையும் போது, விரிவடையும்போது, வாழ்வில் ஏற்படும் தொல்லைகள் புறக்கணிக்கும் ஆற்றல் எளிதாக கிடைத்துவிடும்.

கோபம், ஏமாற்றம் ஆகியவற்றை பகுத்து ஆராயும் அறிவை இந்த ஆற்றல் அளிக்கும். இதனால் மனச்சுமை குறையும். இந்த கணத்தில் மனித வாழ்க்கையை தாக்கும் இடர்களை அடையாளம் காணத்துவங்கி விடுவீர்கள்.

ஆழ்ந்த தியானம் என்பது உண்மையான தனித்துவ மாற்றத்தை ஏற்படுத்தும். உங்களைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ளும்போது, மேலும் அதிகமாக வாழ்வின் மர்மங்களையும் இந்தப் பிரபஞ்சத்தைப்பற்றியும் அறிந்து கொள்ள விரும்புவீர்கள்.

அப்போது, வாழ்க்கையின் பொருள் என்ன? வாழ்வின் நோக்கம் என்ன? இந்த உலகம் என்ன? அன்பு என்பது என்ன? ஞானம் என்பது என்ன? போன்ற கேள்விகள் எழத் துவங்கும். இத்தகைய கேள்விகள் எழும்போது, நீங்கள் அதிர்ஷ்டசாலி என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

இந்தக் கேள்விகள் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இவற்றுக்கு விடைகள் புத்தகங்களில் கிடைக்காது. வாழ்ந்து பார்க்கும் போதுதான் வாழ்வின் மாற்றங்களை அதிக அளவில் காண்பீர்கள். இந்த இடத்தில் உங்களுக்கு ஊன்றுகோலாக இறைதேடல்,

பூஜை, யோகம் போன்றவை எளிதாக வழிகாட்டத் துவங்கும்.

மனித வாழ்க்கையின் நோக்கத்தை படிப்படியாக கடக்கும்போது நிச்சயம் பந்தபாசம், உறவு முறை, ஆடம்பரவாழ்வு, சுகபோகம், சிற்றின்பம் போன்றவை நிலையற்றது என்பது விளங்கும் போது, மனம் தன்னால் பேரின்பத்தை நாடி செல்லத்துவங்கும்.

உடலால் மட்டும் கிடைக்கும் இன்பங்களை சிற்றின்பம் என்றும், உடலுக்கும் மனதுக்கும் சேர்த்தே கிடைக்கும் இன்பத்தை பேரின்பம் என்றும் மனம் வேறுபாடு காணும் நிலை ஏற்பட்டால் உங்கள் மனம் தாமரை இலையாக மாறிவிடும்.

எவ்வளவு அடர்ந்த நீரிலும் மிதக்கும் தாமரை இலையில் நீர் ஒட்டாமல் இருப்பது போன்று, குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும் கூட, சிற்றின்ப சுகபோகங்கள் நம்மை தாக்காது. இந்த வகையில் தியானம், யோகம், பக்திமார்க்கத்தை கையில் எடுக்காமல் தவிப்போரின் மனம் எப்போதும் மனச்சோர்வுடன் இருக்கும்.

மற்றவர்கள் உங்களைப்புரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவீர்கள். உங்களுடன் உட்கார்ந்து மற்றவர்களும் அழ வேண்டும் என்று விரும்புவீர்கள். இரக்கத்தை யாசிக்க தோன்றும். உங்கள் விருப்பப்படி எல்லாம் உலகம் நடக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றும். வெளியே இருந்து ஆயுதங்களால் தாக்குபவர்களைக் கூட சரியாக கையாண்டால், சமாளித்து விடலாம். ஆனால் மனச்சோர்வு என்பது உள்ளிருந்து கொண்டே, கீறிக்கிழித்து குடைந்து உங்களை உபயோகமில்லாமல் அழித்து விடும் விஷ ஆயுதம். உங்களை நீங்களே அழித்துக் கொள்வதைப் போன்ற முட்டாள்தனம் அது! சின்ன சின்ன விஷயத்திற்கு கூட மனம் அல்லல்படும், ஒரு தீக்குச்சி பற்றவில்லை என்றால் கூட துக்கமாகிவிடுவார்.

ஒவ்வொரு திருப்பத்திலும் அச்சம் வரும். நம்பிக்கை குறைந்து காணப்படும். இதுபோன்ற பிரச்சனை இருந்தால் கண்டிப்பாக நீங்கள் மருந்து, மாத்திரை, கவுன்சிலிங் போன்றவற்றை தேர்ந்தெடுப்பதைக்காட்டிலும், தியானம் யோகம் போன்றவற்றில் உங்கள் மனதை திருப்பினால், ஆன்மிக புத்தகங்கள், கோவில் குளம் போன்றவற்றில் உங்கள் புத்தியை செலுத்தினால் உங்கள் அஞ்ஞானம் மெய் ஞானத்தை நோக்கி எளிதாக செல்லும்.

உலகத்தின் மீது கோபம் கொள்ளாதீர்கள். உங்கள் குறைகளை உணர்ந்து அவற்றை மாற்றிக்கொள்ளக்கிடைத்த அற்புதமான வாய்ப்பாக எடுத்துக் கொண்டு செயல்பட்டால் போதும்.

வலிகளும், வேதனைகளும் நிரம்பிய அனுபவங்களையே வாழ்க்கைப் பாடங்களாக ஏற்று, தியானம், யோகம் போன்றவற்றின் மூலம் உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வழங்கப்பட்ட வரம் இது.

**தொகுத்தவர் : M.ஜெயபிரகாஷ், விற்பனைப் பிரிவு நிர்வாகி**


# ரெட்டி மலர் சந்தா படிவம்

| சந்தாவிற்கான கால அளவு | சந்தா தொகை | (✓) டிக் செய்யவும் |
|---|---|---|
| 1 ஆண்டு | 180/- | |
| 3 ஆண்டு | 500/- | |
| 15 வருட சந்தா | 2500/- | |

பெயர் : ....................................................................

முகவரி : ....................................................................

....................................................................

தொலைபேசி : ....................................................................

நான் இத்துடன் ............. வருட சந்தா/15 வருட சந்தா தொகை ரூ............. டி.டி / மணியார்டர் / காசோலை மூலம் **Reddy Elainger Peravai** (ரெட்டி இளைஞர் பேரவை) என்ற பெயரில் எடுத்து இணைத்துள்ளேன்.

நாள் : ______________ சந்தாதாரரின் கையொப்பம் : ______________________________

**சந்தா தொகையை அனுப்ப வேண்டிய முகவரி**

## ரெட்டி மலர்

**எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,**
**சென்னை – 600 083. 044 - 2485 3333, 9688877700.**
**E-mail Id : reddymalar06@gmail.com,**
**Website : www.reddymalar.com,**
**Twitter : @malar_reddy.twitter.com**
**Online Website : www.reddymalar.com**

**ACCOUNT PAYEE : REDDY ELAINGER PERAVAI**

BANK NAME : **INDIAN BANK**

BRANCH : **JAFFERKHANPET,**

A/C. NO. : **7105534900**

IFSC CODE : **IDIB000J019**

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

ESTD : 1984

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

TNEA COUNSELLING CODE 4962

## COURSES OFFERED

### UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

### PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT STATUS

For 2022 Batch
95% Placement

For 2023 Batch
200+ Offers
175+ Internship Offers
as on 05th September 2022

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA

95% CONSISTENT PLACEMENT
150+ COMPANIES
625+ OFFERS
15 LPA HIGHEST SALARY



NEC Special Features

ARIIA 2021 Band - Excellent 10th Rank (All India Level) Under Private or Self Financial Technical Institutes Category
INSTITUTION'S INNOVATION COUNCIL 4 STAR RATING
nirf Rank - 169
DST - FIST Sponsored
NAAC Accredited with Grade A
K.R. Innovation Centre
NBA Accredited*
NewGen IEDC, DST, New Delhi

## FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA CONSULTANCY SERVICES, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN Technologies, Tessolve, wipro, DATA PATTERNS, MISTRAL, Brakes India Private Limited, Capgemini, Centizen, ELITE Constructions, embedUR, vuram, HEXAWARE, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

COURSES OFFERED

- Civil Engineering
- Mechanical Engineering
- Automobile Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net


COURSES OFFERED

UG
B.A. - English B.Com. - Professional Accounting
B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

PG
M.Sc. - Computer Science
M.Sc. - Micro Biology

# KR Kayaar Exports Private Limited

(Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com



ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in


## மணமகள்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | G 7400 | 29.12.1999 | B.Com. | அஸ்தம் | HVF | Rs.15,000/- PM |
| 2 | G 7401 | 12.06.2000 | B.Com. M.Com. | சுவாதி | Accountant in RBS Bank | Rs.30,000/- PM |
| 3 | G 7402 | 29.11.1997 | B.E. | அனுஷம் | Data Analyst | Rs.10 Lakhs / PA |
| 4 | G 7403 | 16.06.1999 | B.E. | புனர்பூசம் | IT Company | Rs.70,000/- PM |
| 5 | G 7404 (Divorcee) | 07.09.1992 | M.Com. | பூராடம் | —— | —— |
| 6 | G 7405 | 23.05.1995 | B.Tech. | பூரட்டாதி | —— | —— |
| 7 | G 7406 | 06.11.1994 | B.Design | கேட்டை | Own Business | Rs.1 Lakh / PM |
| 8 | G 7407 | 12.10.1999 | B.Sc. MCA | விசாகம் | Software Engineer | Rs.30,000/- PM |
| 9 | G 7408 | 10.07.2000 | B.E. | சுவாதி | Wipro | Rs.35,000/- PM |
| 10 | G 7409 | 27.03.2000 | M.Pharm | மூலம் | Assistant Professor | Rs.40,000/- PM |
| 11 | G 7410 | 25.09.2000 | B.Com. CA | மகம் | Executive Audit | Rs.12 Lakhs / PA |
| 12 | G 7411 | 20.10.1995 | B.E. | மகம் | Senior Network Engineer | Rs.40,000/- PM |
| 13 | G 7412 | 23.08.2000 | M.Sc. | ரோகிணி | Life Skill Trainer | Rs.25,000/- PM |
| 14 | G 7413 | 05.07.1995 | MS | அஸ்தம் | Singapore | 6000 Singapore Dollar / PM |
| 15 | G 7414 | 09.08.2000 | M.Sc. | கேட்டை | —— | —— |
| 16 | G 7415 | 03.10.1997 | M.B.B.S. MS | சித்திரை | Doctor | Rs.30,000 /- PM Stipend |
| 17 | G 7416 (Divorcee) | 27.11.1994 | B.Sc. B.Ed. | பூரம் | Private School | Rs.35,000/- PM |
| 18 | G 7417 | 17.04.2001 | B.Com. MBA | திருவோணம் | —— | —— |
| 19 | G 7418 | 20.05.1994 | B.Arch. M.Arch | உத்திரம் | Switzerland | Rs.70 Lakhs / PA |
| 20 | G 7419 | 31.07.1995 | B.Tech. | பூரம் | —— | —— |
| 21 | G 7420 | 27.09.1997 | B.Com. CMA | ஆயில்யம் | Senior Analyst | Rs.8 Lakhs / PA |
| 22 | G 7421 | 26.10.1996 | B.E. | ரேவதி | Senior Revenue Inspector (Govt) | —— |

ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in

## மணமகன்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | B 11141 | 27.05.1998 | B.E. | மிருகசீரிஷம் | Software Engineer | Rs.1 Lakh / PM |
| 2 | B 11142 | 10.06.1997 | B.E. | ஆயில்யம் | Senior Engineer | Rs.8 Lakhs / PA |
| 3 | B 11143 | 22.09.1995 | B.E. | மகம் | Software Engineer | Rs.24 Lakhs / PA |
| 4 | B 11144 | 08.12.1994 | B.E. | அவிட்டம் | Europe | Rs.48 Lakhs / PA |
| 5 | B 11145 | 23.05.1995 | B.Tech. | பூரட்டாதி | Cyber Security Lead | Rs.30 Lakhs / PA |
| 6 | B 11146 | 06.05.1991 | B.Sc. | உத்திராடம் | Administrative Assistant | Rs.60,000/- PM |
| 7 | B 11147 | 27.07.1989 | Diploma | கிருத்திகை | Assistant Manager | Rs.67,000/- PM |
| 8 | B 11148 | 27.10.1999 | B.E. M.S. | ரோகிணி | Data Analyst | Rs.1 Lakhs / PM |
| 9 | B 11149 | 03.07.2000 | BCA | பூசம் | Own School | Rs.1 Lakh / PM |
| 10 | B 11150 | 10.06.1995 | B.E. MS | சுவாதி | Germany | Rs.4 Lakhs CTC |
| 11 | B 11151 | 22.02.2000 | B.Sc. M.Sc. | அஸ்தம் | Cyber Forensics Officer | Rs.50,000/- PM |
| 12 | B 11152 | 20.06.1990 | B.Tech. | கிருத்திகை | Senior Associate | Rs.15 Lakhs / PA |
| 13 | B 11153 | 01.03.2000 | B.Tech. | பூராடம் | System Engineer | Rs.8.27 Lakhs / PA |
| 14 | B 11154 | 17.07.1993 | B.E. | மிருகசீரிஷம் | Site Engineer | Rs.20,000/- PM |
| 15 | B 11155 | 08.09.1992 | B.E. | திருவோணம் | Senior Engineer | Rs.10 Lakhs / PA |
| 16 | B 11156 | 02.10.1995 | B.E. | உத்திராடம் | IT Company | Rs.5 Lakhs / PA |
| 17 | B 11157 | 27.11.1996 | B.E. | மிருகசீரிஷம் | Sap Consultant | Rs.50,000/- PM |
| 18 | B 11158 | 11.10.1994 | M.E. | மூலம் | Cost Engineer | Rs.26 Lakhs / PA |
| 19 | B 11159 | 08.12.1999 | B.Tech.M.Tech. | கேட்டை | Netherland | 2,00,000 Euro |
| 20 | B 11160 | 21.05.1997 | B.E. | விசாகம் | Microsoft | Rs.40 Lakhs / PA |
| 21 | B 11161 | 08.03.1997 | MBA | சதயம் | Deloitte | Rs.20 Lakhs / PA |
| 22 | B 11162 | 24.01.1998 | B.Com. MBA | கேட்டை | Senior Officer | Rs.5 Lakhs / PA |
| 23 | B 11163 | 03.03.1997 | B.Tech. | கேட்டை | Data Scientist | Rs.2 Lakhs / PM |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 24 | B 11164 | 09.04.1997 | DME | அனுஷம் | Quality Engineer | Rs.25,000/- PM |
| 25 | B 11165 | 08.06.1988 | B.E. | உத்திரட்டாதி | Private Sector | Rs.30,000/- PM |
| 26 | B 11166 | 27.09.1992 | B.E. | அஸ்தம் | Accounts Finance | Rs.5-6 Lakhs / PA |
| 27 | B 11167 | 29.10.1997 | B.E. | அஸ்தம் | Assistant Manager | Rs.8 Lakhs / PA |
| 28 | B 11168 | 12.03.1988 | M.Sc. MS | பூராடம் | California | $1,60,000 / PA |
| 29 | B 11169 | 18.10.1995 | MBBS. MS | ஆயில்யம் | Doctor | —— |
| 30 | B 11170 | 30.05.1998 | B.Tech. | பூசம் | Software Engineer | Rs.60,000/- PM |
| 31 | B 11171 | 03.01.1997 | B.Sc. | சுவாதி | Private Company | Rs.30,000/- PM |
| 32 | B 11172 | 16.02.1997 | B.E. | மிருகசீரிஷம் | CTS | Rs.8 Lakhs / PA |
| 33 | B 11173 | 02.09.1996 | B.E. MS | அஸ்வினி | Supply Chain Specialist | Rs.1.5 Lakhs / PM |
| 34 | B 11174 | 15.07.1996 | B.E. | புனர்பூசம் | Software Engineer | Rs.7.20 / PA |
| 35 | B 11175 | 06.02.1993 | DDT.B.Tech. MBA | பூசம் | Field Officer | Rs.30,000/- PM |
| 36 | B 11176 | 27.05.1995 | B.E. | பரணி | Growth Marketing Specialist | Rs.70,000/- PM |
| 37 | B 11177 | 22.01.1992 | DME | பூரம் | Incharge | Rs.30,000/- PM |
| 38 | B 11178 | 01.11.1987 | B.E. | சதயம் | Ashok Leyland | Rs.1,25,000/- PM |
| 39 | B 11179 | 29.11.1995 | B.E. MBA | அவிட்டம் | Office Administrator | Rs,70,000/- PM |
| 40 | B 11180 | 13.06.1988 | B.E. MS. | ரோகிணி | —— | —— |
| 41 | B 11181 | 14.01.1997 | B.E. | உத்திரட்டாதி | Project Engineer | Rs.15 Lakhs / PA |
| 42 | B 11182 | 01.01.1998 | B.E. | அவிட்டம் | Quality Engineer | Rs.5.5 Lakhs / PA |
| 43 | B 11183 | 27.11.1995 | B.E. | திருவோணம் | Singapore | Rs.1,25,000/- PM |
| 44 | B 11184 (Divorcee) | 08.04.1991 | B.E. | உத்திராடம் | Senior Lead Engineer | Rs.16 Lakhs / PA |
| 45 | B 11185 | 21.06.1999 | DME, PDPMD | அஸ்தம் | Own Business | Rs.24 Lakhs / PM |
| 46 | B 11186 | 09.11.1996 | B.E. M.Tech. | சித்திரை | Server Management | Rs.8.4 Lakhs / PA |
| 47 | B 11187 | 10.08.1992 | B.Tech. | பூராடம் | Software Engineer | Rs.75,000/- PM |
| 48 | B 11188 | 20.05.1996 | B.E. | திருவாதிரை | Software Engineer | Rs.1 Lakh / PM |
| 49 | B 11189 | 16.10.1990 | B.E. | உத்திரம் | Business | Rs.12-15 Lakhs / PA |

# தபால் பெட்டி



இமாலயப்பெருமைக்கு எடுத்துக்காட்டு நமது ரெட்டியார் இனம். அதுகுறித்து ஆய்வுசெய்து டாக்டர் பட்டம் பெற்ற உங்களை மாமா என்ற முறையில் மகிழ்ந்து வாழ்த்துகிறேன். வாழ்க பல்லாண்டு.

ரெட்டி மலர் ஜூன் இதழில் நிறுவனத் தலைவரின் மடல் அமைச்சர் ராஜ கண்ணப்பனுக்கு ஒரு சவுக்கடியாக அமைந்தது என்றால் அதுமிகையல்ல. இது போன்ற மடல் எதிர்காலத்தில் எதிர் பார்க்கின்றோம்.

வாழ்க ரெட்டி இனம். வளர்க ரெட்டி மலர்

**அன்புடன், நல்லாசிரியர்.சுந்தரம், வெண்பாவூர்**

ஒரு காலத்தில் ஊருக்கு வெளியே ஒதுக்குபுறமாக நடைபெற்ற மது விற்பனை தற்போது, நகரத்தின் நடுவிலே பிரதான தெருக்களில் விற்கப்படுகிறது. மது விற்பனை சட்டவிரோதமான தொழில் என்பது மாறிப்போய் அரசாங்கத்தால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட அரசு நிறுவனமாக மாறிவிட்டது. படித்த பட்டதாரிகளே ஊழியர்களாகவும், ஐ.ஏ.எஸ் அதிகாரிகளே நிர்வாகிகளாக கொண்டு இயங்கும் வகையில் வளர்ச்சிப்பெற்றுள்ளது. மதுவை ஒழிப்பதற்கு திட்டங்கள் தீட்ட வேண்டிய அரசுத் துறை அதிகாரிகள் மது விற்பனையை அதிகரிப்பதற்கு திட்டங்கள் தீட்டிக் கொண்டுள்ளனர். மது ஒழிப்புக் கொள்கை மாறிப் போனது. மக்கள் நலத்திட்டத்தை தீர்மானிக்கும் சக்தியாக மது விற்பனை உயர்வுப் பெற்றுள்ளது.

இந்த சூழலில் ரெட்டி மலர் வெளியிட்டுள்ள தலையங்கக் கட்டுரை எதிர்காலத்தில் மதுவை ஒழிக்க நாம் எத்தகைய செயலைச் செய்ய வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியது அருமை. மதுவினால் ஏற்படும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் எனவும், மது அரக்கனால் ஏற்படும் கேடுகளை அனைவருக்கும் எடுத்துரைக்க வழங்கிய ஆலோசனையும் பாராட்டுக்குரியது. மதுக்கடைகளை மூடுமாறு அரசை மக்கள் நிர்ப்பந்திக்கும் அளவிற்கு நம்முடைய பிரச்சாரம் அமையவேண்டும். ரெட்டி இன சொந்தங்களே புறப்படுங்கள், பிரச்சார போர் முரசை முழங்குவோம், மது அரக்கனை மாய்ப்போம், மானுடத்தை காப்போம் என்ற பொருள்பொதிந்த ஆசிரியரின் தலையங்கக்கட்டுரை பாராட்டுக்குரியது. வரவேற்கிறேன். வாழ்த்துகள்.

**R.அன்பழகன், நாமக்கல்**

“தமிழ்நாட்டில் ரெட்டியார்களின் சமூக–கலாச்சாரம் மற்றும் அரசியல் வரலாறு ஓர் ஆய்வு” என்கிற தலைப்பில் முதன் முதலாக ரெட்டியார்களைப் பற்றி ஆய்வு செய்த திரு.வீ.செல்வராஜூ அவர்களுக்கு திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளதை பாராட்டுகிறேன்.

இந்த ஆய்வு எவ்வளவு சிறப்பு என்பதை நான் அறிவேன். அவரின் உழைப்புக்குக் கிடைத்த வெற்றி இந்த டாக்டர் பட்டம். இந்த சமூகத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் வகையில் இந்த ஆய்வு இருந்ததை நன்கறிவேன். திரு.வீ.செல்வராஜூ அவர்களின் அறநெறி வாழ்வையும் நான் அறிவேன். எல்லாம் மிகவும் சிறப்பு. அவர் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு பொறுப்பும் சிறப்புப்பெறும். நம் சமுதாயம் உயர தாங்கள் மேற்கொண்ட இந்த ஆராய்ச்சிக்கட்டுரை உதவியாக இருக்கும். அவரின் சீரியப்பணிக்கு தலை வணங்குகிறேன்.

மிகவும் சவாலான செயலை செய்து இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாகவும், சமுதாயத்தின் பல்வேறு துறை–களைச்சேர்ந்த முன்னோடிகளின் தொலைநோக்குக்கான செயல்களை இந்த ஆய்வில் குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது. நமது சமுதாயத்தின் வரலாறு என்ன என்பதை அறிந்து கொள்ளவும், நமது கலாச்சாரம், பண்பாடு, திருமண நிகழ்வுகள், குலதெய்வ வழிபாட்டு முறைகள் என அனைத்தையும் ஆய்வு செய்து உலகறிய செய்தது அவசியமானது.

நமக்குள்ளே இருக்கின்ற பல்வேறு உட்பிரிவுகள், ஒவ்வொருவரின் தனிசிறப்பு என அனைத்தையும் நாம் அறியும் வகையில் தாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பயனுள்ளது. உங்கள் தொண்டு, சேவை மேலும் தொடர இறைவனை வணங்குகிறேன்.

**செ.சந்திரசேகரன், மேலமருதபுரம்.**

பாராட்டுகள். தங்கள் ஆய்வுகோவையை நாங்கள் படிக்கும் வகையில் அனுப்பிவைக்க முடியுமா? புத்தக வடிவில் வெளியிட்டு அனைவரும் படித்து பயன்பெற செய்யுமாறு கோருகிறேன். முடிந்தால் எனக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

**முனைவர். டாக்டர் R.M.ரெட்டி.**

வணக்கம் ஐயா, தங்களின் அர்ப்பணிப்பு நம்முடைய சமுதாய வளர்ச்சிக்கு பெரிய அளவில் மாற்றம் பெறும் வகையில் ஆராய்ச்சி செய்து நம் பாரம்பரியத்தை அரியச் செய்த முனைவர்.செல்வராஜூ அவர்களுக்கு பாராட்டுகள். தங்களின் கடமையை தாங்கள் சரியாக செய்திருக்கிறீர்கள். மதிப்பும், மரியாதையும் உங்களைத் தேடி வரும். வாழ்த்துகள்.

**நம்பி ரெட்டியார், திருநெல்வேலி.**

சதுரங்கப் போட்டியில் சாதனைப் படைத்த கீர்த்திஸ்ரீ ரெட்டிக்கு பாராட்டுகள். இதுப்போன்ற அரிய செயல்களை செய்து சாதனைப் படைத்து வரும் நம் ரெட்டி இன சொந்தங்களை அறிமுகப் படுத்தி வரும் நம் ரெட்டி மலர் இதழுக்கும் பாராட்டுகள். விளையாட்டை ஊக்கப்படுத்த பெற்றோர்களும், தனியார் நிறுவனங்களும், அரசும் முன்வரவேண்டும் என கட்டுரையின் இறுதியில் குறிப்பிட்டது நூறு சதவீதம் உண்மை. பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் முன்மாதிரியாக இருக்கவேண்டும். என் குழந்தை எதை செய்தாலும் அதில் சிறந்து விளங்கவேண்டும் என்பதை கீர்த்திஸ்ரீ ரெட்டியின் தந்தை J.ராஜாராம் அவர்கள் எண்ணியதை பாராட்டுவோம். அவள் சிறந்து விளங்க என்ன வழி என்பதை ஆய்வுசெய்து அவளை ஊக்கப்படுத்தியது பாராட்டுக்குரியது.

ஒரு குழந்தையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பெற்றோர்கள் ஒரு முன்மாதிரியாக இருப்பதற்கு பெரிய அளவில் உதவும் என்பதை வெளிப்படுத்திய ரெட்டி மலரை வாழ்த்துகிறோம்.

**P.புனிதன், வயலூர் ரோடு ரெட்டி நல சங்கம், திருச்சி**

# ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை ஆலோசனைக் கூட்டம்




அரசுப் பள்ளியில் பயின்று மாநில அளவில் இரண்டாம் இடம்
மாணவன் V.கணேஷ் அவர்களுக்கு பாராட்டுகள்






REDDY MALAR, Tamil Monthly, RNI No. TNTAM/2006/18783, R.Dis.No.63/2021
Date of Publication : 1st week of Every Month




Printed by S.SUNDAR RAMAN and Published by V.SELVARAJU on behalf of REDDY ELAINGER PEREVAI and Printed at VASAN PRINT MFG CO, 29, Dr.Besant Road, Chennai - 600 014 and Published at New No.34A, Old No.36/1A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083. Editor : R.RAJASEKARAN.